யமுநாவாஸ்தவ்யராகிரூர்- " b தூயபெருநீர் யமுனைத்துறைவர் திருநாமத்தை இங்கே நம்முடையபேரன 'யமுனைத்துறைவர்' என்று உம்முடையருளால் உகந்து சாத்தும்" என்று நாத₂முனிகளாலே நாமநிர்த்தே₃ஶம் பண்ணப்பெற்று, அவரை 3. "**ஜந்மநா வித்₃யயா ச**" பிதாமஹராக உடையவரென்கை; அவரும் 4. "**பிதாமஹம் நாத₂முநிம் விலோக்ய**" என்ரூர். இப்படி அவராலே சாத்தப்பட்ட திருநாமம், c "எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன்" என்று பின்பும் போர்பெற்றது. d அடியார்க்கின்பமாரியும், e நாத₂முநிநாம ஜீமூதமும் வர்ஷித்தால், b "தூயபெருநீர் யமுனைத்துறைவன்" என்னும்படியான f யாமுநதீர்த்த₂ம் எல்லார்க்கும் அவகா₃ஹிக்கலாமிறே; 5. "**யாமுநார்யஸ்ய தா₃ம்பே₄தி₃மவகா₃ஹ்ய**" g "ஞானத்துறைபடிந்தாடி" என்னக்கடவதிறே; இவரும் 6. "**நாத₂ய நாத₂முநயேऽத்ர பரத்ர சாபி நித்யம் யதீ₃யசரணௌ ஶரணம் மதீ₃யம்**" என்றும் 7. "**ஆத்₃யஸ்ய நஃ குலபதேர் வகுளாபி₄ராமம் ஶ்ரீமத்பத₃ங்க₃ரி யுக₃ளம் ப்ரணமாமி மூர்த்₄நா**" என்றும்-உபகாரஸ்ம்ருத்யதிஶயத்தாலே திருவடித் தொழுகையால் அடியுடையராயிறே இருப்பது. யமுநாவாஸ்தவ்யரென்றதை— "மணக்கால்நம்பி சென்ருமாளவந்தார்" என்கிறது. மணக்கால்நம்பி சென்ருமாளவந்தாராவது - வாத₃த்திலே (ஆக்கி)யாழ்வான்வாயை அடக்குகையாலே "ஆளவந்தார்" என்று திருநாமத்தையுடையராய் — த₃ர்ஶநத்தையாளவந்தாராயிருக்கையாலே. இத்தை மணக்கால்நம்பி கேட்டு இவர்பாடு பலகால் நடந்து பச்சையிட்டிறே இவரை h பச்சைமாமலைபோல் மேனியிலே மூட்டிற்று; ஆகையாலே அவர் யத்₃ருச்சாவிஶேஷத்தாலே ஆனவரென்றபடி; 'பூர்வத₃ஸ்மாது; புகுந்தநுப₄வியும்" என்று i ஆறுபுடை சூழரங்கரைக் காட்டினரிறே. அவரும் j "மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்" என்னும்படி திருவாய்மொழி முதலானவற்றையும் திருமாலையாண்டான் முதலானுர்க்கு ப்ரஸாதி₃த்தருளினர்; k "நடமினே நமர்களுள்ளீர்" என்று அபி₄நயிக்கும்படியிறே அக்காலத்திலே நடந்து போந்தது:

/ (பா) உஷித்வா த்₃வாத₃ஶ ஸமா இக்ஷ்வாகூணாம் நிவேஶநே

a பெரு 4-9. b திருப்பாவை 5. c இரா 21. d 4-5-10. e ர-ஸ்த 1-5.
f யதிராஜஸப்ததி 8. g திருவிரு 93. h திருமாலை 2. i j தனியன். k 10-2-8.

மாலாத்ரராகிறார்-"குருமாலாதரர்" என்னும்படியான திருமாலையாண்டான். "குருமாலாதரர்" என்கிற விசேஷணம்-திருவாய்மொழி ப்ரவர்த்தநத்தாலுண்டான குருத்வத்தைச் சொல்லுகிறது; உடையவர்க்குத் திருவாய்மொழியின் அர்த்தத்தை உபதேசித்தாரிறே இவர்தாம்; இது a அறியாக்காலத்திலே அறியலாம். மாலாத்ரரென்று- b நாட்கமழ் மகிழ்மாலை மார்வரான ஆழ்வார் திருநாமமாயிற்று; c "செந்தொடைக்கதிபர்" என்றிறே பர்யாயநாமமிருப்பது; சொல்மாலைகள் சொல்லும்படிக்கு மாலையிட்டபடி.

(யோகீந்த்ரம் குருகேசசந்த்ரஜலதிம்) அதாவது — குருகைப்பிராற்கன் பாமெதிராசரென்றபடி: திருக்குருகைப்பிரான் பிள்ளானை, ஆழ்வார் திருநாமஞ் சாத்துகையாலேயும், 1. **"புத்ரீக்ருதோ பாஷ்யக்ருதா ஸ்வயம் ய:"** என்கிறபடியே குமாரராக அபிமாநித்தருளுகையாலேயும், 2. **"யதிராஜாப்தி சந்த்ரமா:"** என்று- அவரைக்கண்டபோதெல்லாம் சந்த்ரோதயத்தில் மஹோததிபோலே ப்ரீதிப்ரகர்ஷத்தை உடையராயிறே உடையவர்தாம் இருப்பது. d மாறனடிபணிந்துய்ந்தவன் e உறுபெருஞ்செல்வமுமித்யாதி — அறிதரநின்ற இராமாநுசனிறே; f வளர்த்த இதத்தாய் இராமாநுசனுகையாலே, ஆழ்வார் திருவடிகளில் தமக்குண்டான ஸம்பந்தம் பிள்ளானளவும் வெள்ளமிட்டது. இப்படித் திருவாய்மொழியின் அர்த்தத்தை இவரிடத்திலே தேக்கினபடியையும், அது அப்பால் புறவெள்ளமிட்டபடியையும்- g "தெள்ளாருஞானத் திருக்குருகைப்பிரான் பிள்ளானெதிராசர் பேரருளால்" என்று தொடங்கி g "அன்றுரைத்த தின்பமிகுமாருயிரம்" என்றருளிச்செய்தாரிறே. ஸம்ஸ்க்ருதத்ராவிடவேதங்களான உபயவேதாந்தத்துக்கும் ப்ரவர்த்தகராயிற்று இவர்தாம்; ஆகையாலிறே 3. **"குருகேஸ்வரபாஷ்யக்ருதௌ"** என்றது.

கோவிந்தகூராதிபராகிறார் - "கோவிந்தர், கூரேசர்" என்னும்படி தர்ஶநத்துக்கு த்ருஷ்டி பூதரானவர்களாய், உடையவர்க்கும் அத்தாலே அத்யந்தம்அபிமத விஷயமானவர்கள். இவர்களையாயிற்று ப்ரபத்திஶாஸ்த்ர ப்ரவர்த்தகராகக் கற்பித்தருளிற்று: ஶ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநத்துக்கு நடாதூராழ்வானையிறே அதிஷ்டாதாவாக்கியருளிற்று; ஆழ்வான் திவ்யஸூக்திகளெல்லாம் ப்ரபத்த்யர்த்த ப்ரகாஶகமான ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களை அடியொற்றியாயிற்றிருப்பது. இங்கிவ்விரு வரையும் இடுக்கிச் சொன்னது - இருவரும் பட்டருக்காசார்யர்களாகையாலே. பட்டர்க்குத் திருவாய்மொழியில் ஆழ்வானோடுண்டான ஸம்பந்தம் h எண்பெருக்கநலத்தினீட்டிலே கண்டுகொள்வது. எம்பார் பட்டர்க்கு பகவச்சரணவரணநுஷ்டாந ப்ரகாஶகமான த்வயோபதேஶ முகேந ஆசார்யரென்னுமது 4. **"மத்விஶ்ரமஸ்தவீ"** என்கிற அவ்ஸூக்தியிலே காணலாம். i "பட்டர் ஆழ்வான்திருவடி

---

a 2-3-3. b 4-10-11. c d இரா 1. e இரா 19. f தனியன்.
g உபதேஶ 41. h 1-2-10. i ப்ரமேயரத்நம்.

களிலே ஆஶ்ரயித்து எம்பார்பக்கலிலே ஜ்ஞாநோபஜீவநம் பண்ணினார்" என்றும் ப்ரமேயரத்நத்திலே பேசிற்று, a "பட்டர்தாம் எம்பார்பாடு ரஹஸ்யங்கேட்டாராயிறே யிருப்பது" என்று தனித்₃வயத்திலே அருளிச்செய்தார். இவர்க்கு அவர் பக்கல் திருவாய்மொழியில் அந்வயமுண்டென்னுமதுக்கு, b "பூவியல் பொழிலும் தடமுமவன் கோயிலுங்கண்டாவியுட்குளிர" என்கிறவிடத்துக்கு வ்யாக்₄யாநஞ்செய்தருளுகையில் சீராமப்பிள்ளை அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அது தோன்ற 1. **"ஶ்ரீவத்ஸசிஹ்ந மிஶ்ரேப்₄ய:"** 2. **"ராமாநுஜ பத₃ச்சா₂யா"** என்றிரண்டு ஶ்லோகத்தையும் ஸஹபடி₂த்தருளிற்று, 3. **"ப₄ட்டார்யாய ப்ரபத்திம் ஹ்யதி₃ஶத₃த₃ வரம் த்₃ராவிடா₃ம்நாயமௌளேரர்த்த₃ம் ஶ்ரீப₄ஷ்யமந்யாநபி ச யதிவராதே₃ஶதோர்த்₂தா₃ந் ரஹஸ்யாந்। யஶ்சோக்தோ தே₃ஶிகேந்த்₃ரோ யதிவரசரணச்சா₂யநாமார்யவர்யஸ்தம் கோ₃விந்த₃ார்ய மஸ்மத்குலகு₃ருமமிதஜ்ஞாநவைராக்₃யமீடே₃॥"** என்னக்கடவதிறே.

(ப₄ட்டார்யம்) அவராகிறார் - "பட்டர்" என்னும்படியான "ஶ்ரீபராஶரப₄ட்டர்" என்னும் அபி₄தா₄நத்தை உடையராய், 4. **"ஶ்ரீரங்க₃ராஜ கமலாபத₃ லாலிதத்வம்"** என்னும்படி-பெரியபெருமாளுக்கும் ஶ்ரீரங்க₃நாயகியார்க்கும் குமாரராய், அதுக்கு மேலே, உடையவரும் "இவனை நம்முடையாரெல்லாரும் நம்மைக்கண்டாப்போலே கண்டுவாருங்கோள்" என்று பெருமாள் ஸந்நிதி₄யிலே விஶேஷாபி₄மாநம் பண்ணும்படியான பெருமையையுடையவரென்கை. இவர்தாம் c அஜஸ்ரம் ஸஹஸ்ர கீ₃த்யநுஸந்தா₄ந தத்பரராய் ப₄க₃வத்₃கு₃ணங்களை அநுப₄வித்துக்கொண்டு திருநெடுந்தாண்டகத்திலும் மண்டியிறேயிருப்பது; இவருடைய தி₃வ்யஸூக்திகளும் அருளிச்செயலை அடியொற்றியிறேயிருப்பது. அருளிச்செயல் நாலாயிரத்துக்கும் ப₄ட்டர் நிர்வாஹகமேயிறே அதிஶயித்திருப்பது.

நிக₃மாந்தயோகி₃யாகிறார் - வேதா₃ந்திமுனியான வேதா₃ந்திநஞ்ஜீயரென்கை. 5. **"நமோ வேதா₃ந்தவேத்₃யாய"** என்னக்கடவதிறே. பட்டர் நெடுந்தூரஞ்சென்று தேடித் திருத்தி எடுத்த விஷயமாயிற்று இவர்தாம். "ஏவம்வித₄ரான இவர் "d பட்டர் நல்லருளாலேயாயிற்று ஒன்பதிநாயிரமாகத் திருவாய்மொழிக்கு ஒரு வ்யாக்₄யாநமும் செய்தருளி, நூறுரு திருவாய்மொழியை நிர்வஹித்து, அத்தாலே ஶதாபி₄ஷேகமுஞ் செய்தருளினார்" என்னுமது ஜக₃த்ப்ரஸித்₃த₄மிறே,

ஜக₃தா₃சார்யராகிறார்- e "துன்னுபுகழ்க் கந்தாடைத்தோழப்பர்" இத்யாதி₃யிற் படியே உண்டான திருநாமத்தினேற்றத்தையுடையரான, இருகண்ணர்க்கன்புடைய நம்பிள்ளையென்கை. "நம்முடையபிள்ளை திருக்கலிகன்றிதாஸர்" என்றிறே நஞ்சீயராலே இவர் நாமநிர்த்தே₃ஶம் பண்ணப்பட்டது. 6. **"காருண்யபூர்ணம் கலிவைரிதா₃ஸம்"** என்னக்கடவதிறே. இவர் தோற்றியிறே திருவாய்மொழி முத

---

a தனித்₃வயம். b 6-7-5. c ஶ்ரீரங்க₃ராஜ. 1-49. d உபதே₃ஶ 42. e உபதே₃ஶ 51.

லான தி₃வ்யப்ரப₃ந்த₄ங்களுக்கெல்லாம் வ்யாக்₂யாநமுண்டாயிற்று. "'இவர் தாமாழ்வாரவதாரம்' என்னுமது தோற்ற, கார்த்திகையில் கார்த்திகைத்திருநக்ஷத்ரத்தின்நாள் கலியன் திருமங்கையாழ்வார், திருவீதி எழுந்தருளும்போது, திருக்கலிகன்றிதா₃ஸரான இவர் திருமாளிகை வாசலிலே திருக்காவணமிட்டலங்கரிக்க, அங்கே எழுந்தருளித் திருப்பணியார வகைகளும் அமுதுசெய்தருளி, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரஸாதி₃த்து அவரை அத்₃யாபி உபலாலித்து, அவ்வருகே யெழுந்தருளுவர்" என்று பெரியோர்களருளிச்செய்வர்கள்; ஆகையாலிறே "நம்மாழ்வார்" என்னுமோபாதி, "நம்பிள்ளை" என்று போருகிறது; அவரை "ப்ரதி₃மாசார்யர்" என்னுமோபாதி, இவரை "லோகாசார்யர்" என்றும், அவரை "திருநாவீறுடையபிரான்" என்னுமோபாதி, இவரை "வீறுடையார்" என்றும் போருகிறது; "ஆழ்வார்தம்முடைய அவதாரம்போலே ஓரவதாரவிஶேஷமாய்ப் பெருமாளுக்கு ப்ராணபூ₄தரான நம்பிள்ளையை" என்றிறே ஜ்ஞாநாதி₃கையான தோழப்பர் தே₃விகளுமருளிச்செய்தது. 1. **"வார்த்தோஞ்ச₂வ்ருத்யாபி"** என்று தொடங்கி, 1. **"தஸ்மை நமஸ் ஸஶ்க்திமஹார்ணவாய"** என்றிறே நம்பிள்ளை வைப₂வமிருப்பது.

(ஸக்ருஷ்ணத்₃வயௌ) அவர்களாகிறார்-"இருகண்ணார்" /என்னும்படி ஸௌப₂ராத்ரத்தையுடையராய், "நம்பிள்ளைக்கு நயநத்₃வயம்" என்னலாம்படி ஸூக்ஷ்மதர்ஶிகளாயிருக்கிற பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளையென்கை. இருகண்ணர்க்கன்புடைய நம்பிள்ளையென்கையாலே, 2. **"ஸ்நேஹேந க்ருபயா வாபி"** என்கிறபடியே-ஸ்நேஹபூர்வகமான க்ருபையாலேயாயிற்று ஸகலார்த்த₂ங்களையும் ப்ரஸாதி₃த்தருளிற்று. இவர்களுமப்படியே, a "மாறன்மறைப்பொருளைச்சொன்னது இருபத்து நாலாயிரம்" b "நன்குரைத்த ஈடு முப்பத்தாருயிரம்" என்னும்படியிறே திருவாய்மொழிக்கு வ்யாக்₂யாநமும் ஈடுமருளிச்செய்தது; அத்தைப்பற்ற, 3. **"ஸ்ரீக்ருஷ்ணத்₃வயபாத₃பா₃ப்₄ஜே ப₄ஜே யத₃நுகம்பயா। விப₄வதி விமதம்₃ லோகே த்₃ராவிட₃ப்₃ரஹ்ம ஸம்ஹிதா॥"** என்றநுஸந்தி₄த்தார்கள். c "பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும்" என்னும்படி மற்ற மூவாயிரத்துக்கும் வ்யாக்₂யாநஞ்செய்தருளினாரிறே; திருவாய்மொழிக்கு வடக்குத்திருவீதிப்பிள்ளையிலும் ப்ரத₂மப்ரவர்த்தகர் ஆச்சான்பிள்ளையாகையாலே 4. **"ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய"** என்றும் 5. **"ஸ்ரீக்ருஷ்ண பாத₃பாத₃பா₃ப்₄ஜே"** என்றும் இரண்டுதனியனும் அடைவேயிருவருக்கு முண்டாயிற்று; அதுதேதான்ற "முந்தினதனியன் ஆச்சான்பிள்ளையது" என்றருளிச்செய்வர்கள்; d "பெரியவாச்சான்பிள்ளை தெள்ளார் வடக்குத்திருவீதிப்பிள்ளை" என்றிறே எடுத்தருளிற்று; ஆச்சான்பிள்ளை ஸந்நிதி₄யிலே தாம் சில அர்த்த₂விஶேஷங்கள் கேட்டதாகவும் அருளிச்செய்தாரிறே வடக்குத்திருவீதிப்பிள்ளை "ஆசார்யஸம்மதி" என்கிற ரஹஸ்யத்திலே.

---

a உபதே₃ஶ 43. b உபதே₃ஶ 44. c உபதே₃ஶ 46. d உபதே₃ஶ 37.

/அங்ஙனன்றிக்கே, முந்தின தனியன் வடக்குத்திருவீதிப்பிள்ளையதாகவும், மற்றைத்தனியன் ஆச்சான்பிள்ளையதாகவு மருளிச்செய்வர்கள்; திருவாய்மொழியீட்டின் ப்ராதுர்ப்யத்தாலும், வடக்குத்திருவீதிப்பிள்ளை செய்தருளின ஆசார்யஸம்மதியினடியிலும் 1. **"ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய"** என்றெழுதியிருக்கையாலும், இத்தை வடக்குத்திருவீதிப்பிள்ளை தனியனுகவும், 2. **"ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே"** என்கிறது ஆச்சான்பிள்ளையதாகவுமே ஸித்தாந்தம்; அப்போது, 2. **"ஸர்வஸித்திரஸ்துந்மம"** என்கிறது ஸரஸமாயிருக்கும். அவர் ரஹஸ்ய ப்ரபந்தங்களினடியிலே எழுதியிருக்கிறதுமப்படியே. /

மாதவ பத்மநாபர்களாகிறார் - இவரீடனித்தற்கேய்ந்த மாதவர் பற்பநாபரென்கை; இவர்களில் ஸ்ரீமாதவராகிறார் - a "சீமாதவனடிக் கன்புசெய்யும் தஞ்சத்தொருவன்" என்றும், 3. **"மாதவஶிஷ்யபாதௌ"** என்றும் சொல்லும்படியான நம்பிள்ளை, தம்முடைய ஆசார்யரான நஞ்சீயருடைய திருநாமம் சாத்தும்படியான பெருமையையுடையராய், அவர்க்கு அத்யந்தம் ப்ரீதிவிஷயமாயிருக்கிற "ஈயுண்ணிச்சிறியாழ்வானப்பிள்ளை" என்று நிரூபகத்தையுடையரான ஸ்ரீமாதவரென்கை; 4. **"யத்வசஸ்ஸகலம் ஶாஸ்த்ரம் யத்க்ரியா வைதிகோ விதி: । யத்கடாக்ஷா ஜகத்ரக்ஷா தம் வந்தே மாதவம் முநிம் ॥"** 5. **"ஸ்ரீபராஶர பட்டார்ய ஸம்ஶ்ரயத்நாய ஸ்ரீமாதவமீஶ்வராய நம:"** என்னக்கடவதிறே. ஏவம்விதரான இவர்க்கு ஈடுவந்தவரலாற்றை b "சீரார் வடக்குத் திருவீதிப்பிள்ளை" என்று தொடங்கி அருளிச்செய்தாரிறே; அத்தைப்பற்ற 6. **"வரதார்யதயாபாத்ரம் ஸ்ரீமாதவகுரும் ஶ்ரயே । குருகாதீஶ வேதாந்த ஸேவோந்மீலித வேதநம் ॥"** என்கிற தனியனுண்டாயிற்று.

பத்மநாபராகிறார் - c "ஆங்கவர் பால்பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை தாங்கொடுத்தார் தம்மகனார் தங்கையில்" என்றும், 7. **"மாதவாத்மஜஸ்ய"** என்றும் பேசும்படி ஸ்ரீமாதவப்பெருமாள் குமாரரான பத்மநாபப்பெருமாளென்கை. இப்படி நம்பிள்ளையாலே மஹாஶ்வர்யமான திருவாய்மொழியினீட்டை ப்ராப்தரான ஸ்ரீமாதவர், தம் குமாரரான பத்மநாபர்க்கு ஈட்டை ப்ரஸாதித்து, நம்பிள்ளை நியமநத்தின்படியே d ஓராண்வழியாயுபதேஶத்துப்போரும்படி உபதேஶிக்க, அவருமப்படியே அநுஸந்தித்து ஸ்ரீகோஶத்தைக்கோயிலாழ்வாரிலே திருவாராதநமாக ஏறியருளப்பண்ணி நிதியை நோக்குமாபோலே நோக்கிக் கொண்டு போந்தாரிறே; பெருமாள்கோயிலில் பட்டர்கள் திருவீதியிலே திரு

/ இந்தப் பாரா முன் சொன்னதற்கு முரணுயிருக்கையாலும், அநுஷ்டாந விருத்தமாயிருக்கையாலும், பெரியதிருமுடியடைவு முதலானவற்றில் பெரியவாச்சான்பிள்ளையையே யாமுநபுத்ரராகக்குறித்திருக்கையாலும் இது ப்ரக்ஷிப்தமாயிருக்கலாம்.

a இயல்சாத்து b உபதேஶ 48. c உபதேஶ 49. d உபதேஶ 37.

மாளிகையிலே 1. "யேநாவகாஹ்ய விமலோஸ்மி ஸடாரிஸஶிரோ வாணீகுஞர்த்த, பரிபோத, ஸுதாபகாயாம் । ஶ்ரீமந்முகுந்த, சரணப்,ஜமது,வ்ரதாய ஶ்ரீபத்,மநாப,குரவே நம ஆசராம: ॥" என்றிறே கோலாலாபமிருப்பது.

(ஸுமந:கோலேஸுதே,வாதி,பாங்) கோலேஸுராகிறார் - "கோலவராஹப் பெருமாள்" என்று திருநாமத்தையுடையரான நாலூர்ப்பிள்ளையென்கை. இவரருளாளர் திருவடியூன்றியவரென்றிறே இவர்க்கு நிரூபகம். அதாவது - பத்,மநாப,ப்பெருமாள் திருவடிகளை ஆஶ்ரயித்து, அவரை ப்ரணிபாத நமஸ்கார ப்ரியவாக்குகளாலே & குருக்களுக்கநுகூலராய் மிகவுமுகக்கப்பண்ண, இப்படி பூலஸாத,ஸுஶ்ரூஷையை யுடையராயிருக்கிற நாலூர்ப்பிள்ளைக்கு, ப்ரணிபாத ப்ரஸங்கராயிருக்கிற அவர், ஈட்டை இவரொருவர்க்குமே ஓராண்வழியாக முன்பு நடந்து போந்தபடியே ப்ரஸாதி,ப்பதாக இவரைப் பேரருளாளப்பெருமாள் திருமுன்பே கொண்டுபுக்கு "ப்ரமாணபுரஸ்ஸரமாகச் சூழறவுகொண்டு சொல்லவேணும்" என்று ஶ்ரீஸடகோபனை அர்ச்சகமுகேந இவர் திருமுடியிலே ஊன்றுவிக்க, அவர் இத்தை வெளியிடாமைக்கு ஊன்றுவிக்கிற ஆகாரத்தை பாவஜ்ஞரான இவரறிந்து பெருமாள் திருமுகமண்டலத்தைப் பார்த்து, தம் திருமுடியிலே வைத்த ஶ்ரீஸடகோபனை "அருளாளர் திருவடியூன்றினவர்" என்னும்படி தம் திருக்கையாலே ஊன்றி ஸம்ஜ்ஞைபண்ண, அது ஸர்வஜ்ஞரான பெருமாள் திருவுள்ளத்திலேயுற்று "இத்தை நீரெல்லார்க்கும் ப்ரகாசிப்பியும்" என்று அர்ச்சகமுகேந திவ்யாஜ்ஞையிட்டருள, அத்தைக்கேட்ட பத்,மநாப,ரும் எண்ணினவாருகாமையாலே "திருவுள்ளமானபடி" என்று பின்பு உகப்புடனே ப்ரஸாதி,த்தருளினரென்கை ; b "பாங்குடனே நாலூர்ப்பிள்ளைக்கவர்தாம்" என்னக்கடவதிறே.

இவர் "இத்தையெல்லார்க்கும் வெளியிடவேணும்" என்கிற தம்முடைய பரஸம்ருத்,த்,யேகப்ரயோஜநதாரூபமான திருவுள்ளக்கருத்தாலே பேரருளாளப் பெருமாளைக் குறித்து ப்ரத,க்ஷிண நமஸ்காராதி,களைப் பண்ணியும், அநதிக்ரமணஹேதுவான சரணக்,ரஹணத்தைப்பண்ணியுமாயிற்று இவர் அர்த்தி,த்தது ; அவரும் c அர்த்தி,தார்த்த, பரித,ாந தீ,க்ஷிதராம்படி செய்தருளினர். இப்படி வகுள பூ,ஷணவாக,ம்ருதமாத்ரமன்றிக்கே, வசநபூ,ஷணத்துக்கும் ப்ரவர்த்தகர் பேரருளாளப் பெருமாளிறே. நாலூர்ப்பிள்ளைதான் இப்படி ஈட்டை அர்த்தி,த்துப்பெற்றபடியாலே - "ஸுமந:கோலேஸு" என்று ஸவிஶேஷணமாக அருளிச்செய்தது.

2. "சதுர்க்,ராமோத்,பவம் ஶ்ரீமத்,ராமாவரஜ கிங்கரம் । ஸர்வதா த்,வயஸந்நிஷ்டம் கோலாஹ்வயமஹம் பஜே ॥" 3. "ஶ்ரீமத்,ராமாநுஜதா,ஸ பாத,யுக்,மமுபாஸ்மஹே । ஸடகோபார்ய வாணீநாமர்த்த, தாத்பர்யஸித்,த,யே ॥" என்றிறே இவர் விஷயத்

a பெரியாழ் 4-4-2. b உபதேஶ 49. c வரத,ராஜஸ்தவம் 2.

தில் தனியன்களிருப்பது. இப்படித் திருவாய்மொழிக்கு ப்ரவர்த்தகரான மாத்ர மன்றிக்கே, பெரியாழ்வார்திருமொழி, பெரியதிருமொழி முதலானவற்றுக்கும் 'ஸ்ப்ஷ்டார்த்தவ்யாக்யாநமுஞ் செய்தருளினர்; அதிலே ஸ்ரீவசநபூஷண வாக்யத்தையும் ஸம்மதியாக எடுத்தருளினர். 1. "**யः பத்மநாப க்ருதஸ் ஸடஜிந் முநீந்த்ர ஸ்ரீஸூக்தி பாஷ்யமதிகம்ய ஸம்ருத்தபோத: | தத்தேவராஜகுரவே ஷ்யதிஸச்சதுஷ்பூர்வாஸேத்தத கோலவர தேஸிகமாஸ்ரயே தம் ||**" என்றுமிறே இவர் ஸம்ப்ரதாய க்ரமமிருப்பது.

தேவாதிபராகிறார் - தேவப்பெருமாள்; அவர்தாம் - ராமாநுஜார்ய தாஸ ஸுதரான தேவராஜர்; நாலூர்ப்பிள்ளைதாம் தம்முடைய திருவுள்ளக்கருத்தின் படியே பெருமாள் தலைக்கட்டியருளுகையாலே, பெற்றுப்பேரிடும்படியான அந்த உபகாரத்துக்கு, தமக்குக் குமாரர் திருவவதரித்தவுடனே "தேவப்பெருமாள்" என்று திருநாமஞ்சாத்த, இப்படிப் பேர்பெற்று ஸகலகலாபூர்ணராய் வளர்ந்து போருகிற குணஶாலியாய் a நல்லமகனரான நாலூராச்சான்பிள்ளைக்கு, "இத்தை வர்த்திப்பித்துக்கொண்டுபோரும்" என்று ஈட்டை ப்ரஸாதித்தருளினர்; 2. "**ஸுதம் கோலவராஹஸ்ய குருகாதிஸ பூர்வஜம் | ஸாந்தம் ஸத்வ்ருத்தநிரதம் தேவராஜ மஹம் பஜே ||**" b "நமோஸ்து தேவராஜாய" என்னும்படியிறே நாலூராச்சான் பிள்ளை வைபவமிருப்பது. அன்றிக்கே, "இவரருளாளர் திருவடியூன்றினவர்" என்கிறதுக்கு, "இவரென்று-கீழ்ப்ரஸ்துதரான பத்மநாபரைச் சொல்லி, அருளாள ரென்று - அவருடைய அருளையுடையவரென்று நாலூர்ப்பிள்ளையைச் சொல்லி, திருவடியூன்றின தேவப்பெருமாளென்று - ஈட்டை ப்ரகாசிக்கும்படி பேரருளாளப் பெருமாளாலே திருவடியூன்றப்பட்ட நாலூராச்சான்பிள்ளையைச் சொல்லி, அப்படித் திருவடியூன்றின தேவப்பெருமாள் கைக்கொண்டருளும் திருமலையாழ்வா ரென்று - திருவாய்மொழிப்பிள்ளையைச் சொல்லுகிறது" என்றுமருளிச்செய்து போருவர்கள்; இந்த யோஜனையே- a "மேலோர்க்கீந்தாரவரே மிக்கு" என்கிறத் துக்கு மிகவும் சேர்த்தியாயிருக்கும். "தேவாதிபாந்" என்கிற பஹுவசநத்தாலே- கீழுக்தரானவர்களையெல்லாஞ் சொல்லுகிறது; (திருமலையாழ்வார் பதங்கள் முன்பென்னுட் சேர்ந்தனவே) என்னக்கடவதிறே.

"நாதஸ்ம பங்கஜநேத்ர" என்கிற தனியனும் "திருவருள்மால்" என்கிற தமிழ்த் திருநாமத்தனியனும், ஈட்டுக்கும் மற்ற அருளிச்செயல் வ்யாக்யாநங்களுக்கும் தனியனுக, முப்பத்தாருயிரப் பெருக்கரான பெரியஜீயரநுஸந்தித்துப் போருமதாயிருக்கும். "நாதஸ்ம்" என்று தொடங்கி, திருவருள்மால் - திருமலையாழ்வாரிலே சாற்றும்படியாயிருக்கும். ரஹஸ்யங்களினுடைய வரலாற்றையும், 3. "**லோககுரும் குருபி:**" என்றுதொடங்கி, 3. "**தீப்ரஸாதந குரும் ச பஜேஹம்**" என்று

---

a உபதேஸ 49. b தனியன்

தலைக்கட்டின தனியனுலே அநுஸந்தி₄த்தருளினார். "தே₃வாதி₄பாம்" என்று சொல்லுகிறவிடத்திலே-ஈட்டிலர்த்த₃த்துக்கு உபயுக்தமாக—**வகுளபூ₄ஷணஸாஸ்த்ர ஸாரமான** ஸ்ரீவசநபூ₄ஷணம், "த்₃வயார்த்த₃ம் தீ₃ர்க்க₄ஸரணாக₃தி என்றது ஸார ஸங்க்₃ரஹத்திலே" என்னும்படியான ஸாரஸங்க்₃ரஹம் முதலானவற்றை அருளிச் செய்த லோகாசார்ய கு₃ருவும், திருவாய்மொழி வ்யாக்₂யாநமிருபத்துநாலாயிரத் துக்கு ப்ரவர்த்தகரான அப₄யப்ரத₃ராஜ புத்ரரும், அவர் ஶிஷ்யராய், திருவாய் மொழிக்குரை பன்னீராயிரமாக அருளிச்செய்த ஸுந்த₃ரஜாமாத்ரு முனியும், த்₃ரா விட₃ாம்நாயஹ்ருத₃யதா₃ர்ஶியான ஸுந்த₃ரஜாமாத்ருதே₃வரும் ஸுசிதர். ஆகை யாலிறே மேல் இவர்கள் தனியன்களை அநுஸந்தி₄க்கிறது, இவைகளுக்கு மேலாக வாயிற்று a "நமோஸ்து தே₃வராஜாய" b "நமஶ்ரீஶைலநாத₂ாய" என்று நடத்திப் போருவது. தே₃வாதி₄பரான நாலூராச்சான் பிள்ளை c மேலோர்க்கீகையாவது-கீழிலவர்களைப்போலே d ஓராண்வழியாய் ஆழ்வாரைத் திருப்புட்குழியிலே கைக் கொண்டருளி, அங்கு நின்றும் திருநாராயணபுரத்திலே எழுந்தருளி அவர் தொடக்கமாகி ஆயி, பிள்ளை உள்ளிட்டார்க்கும் ப்ரஸாதி₃த்தருளினபடி யென்கை; அத்தைப்பற்ற **1. "கோலாதி₄பாத் பிதுரவாப்ய ஸஹஸ்ரகீ₃தேர் ப₄ாஷ்யம் ஹி பூர்வதர தே₃ஶிக வர்ய கு₃ப்தம்। த்ரேத₃ா ப்ரவர்த்ய பு₄வி யः ப்ரத₃யாஞ்சகார தம் தே₃வராஜ கு₃ருவர்ய மஹம் ப்ரபத்₃யே॥" 2. "ஶ்ரீஶைலநாத₂கு₃ரு மாத்ருகு₃ருத்தமாப்₄யாம் ஶ்ரீஸ்தி தே₃ஶிகவரேண ச யஸ் த்₃ரிதை₃வம்। வ்யக்தஶ் ஶடா₃ரிக்ருதி ப₄ாஷ்ய ஸுஸம்ப்ரத₃ாயோ விஸ்தாரமேதி ஸஹி வைஷ்ணவ புங்க₃வேஷு॥" 3. "தேவாதி₄பாத் ஸமதி₄க₃ம்ய ஸஹஸ்ர கீ₃தே: ப₄ாஷ்யம் நிகூ₃ட₄மத₂ யः ப்ரத₃யாஞ்சகார। குந்தீபுரோத்₃ப₄வமமும் ஶரணம் ப₄ஜே தம் ஶ்ரீஶைலநாத₂முருப₄க்திப்₄ருதம் ஶடா₃ரெள॥" 4. தே₃வாதி₄ பாத₃த்₃வ₄தம் ப₄ாஷ்யம் பாராங்குஶஶ்ருதே:। ப்ராவர்த்தயத்₃யஸ் ஸேவே தம் ஶட₃ஜித் ஸமிக்திதே₃ஶிகம்॥ 5. "ஶ்ரீதே₃வராஜகு₃ருதோ த்₃ரவிட₃ாக₃மாந்தப₄ாஷ்யம் ஹ்ருயவாப்ய பு₄வி யः ப்ரத₃யாஞ்சகார। தம் யாத₃வாத்₃ரிபதிமால்யஸமர்ப்பணைகநிஷ்ட₃ம் ப₄ஜேய ஜநநீகு₃ருமஸ்மத₃ார்யம்॥"** என்னக்கடவதிறே.

இப்படி நடந்து போருகிற ஈட்டின் வரலாற்றை e "சீரார்" e "ஆங்கவர்பால்" என்கிற இரண்டுபாட்டிலும் விஶத₃மாக அருளிச்செய்தருளினாரிறே பெரியஜீயர்; அவ்வளவுமன்றிக்கே, திருவாய்மொழிக்கும் மூவாயிரத்துக்கும் திருவாய்மொழிப் பிள்ளைக்கு நாலூராச்சான்பிள்ளை அர்த்த₃ம் ப்ரஸாதி₃த்தருளினதுக்கு த்₃யோதகமாக, f "மாற்றுத்தாய்" என்கிற பாட்டின் வ்யாக்₂யாநத்திலே பெரியஜீயர்தாமே ஸுசிப் பித்தருளினார். பிள்ளை செய்தருளின பெரியாழ்வார் திருமொழிவ்யாக்₂யாநம் பல விடங்களிலும் "நாலூர்ப்பிள்ளை ப்ரஸாதி₃த்ததாக ஆச்சான்பிள்ளை அருளிச்

---

a தனியன் b தனியன் c உபதே₃ஶ 49. d உபதே₃ஶ 37.
e உபதே₃ஶ 48. f பெரியாழ் 3-9-4.

செய்வர்" என்றிறே அருளிச்செய்தது; பிதாபுத்ரர்களுக்குத் திருவாய்மொழி முகேந உண்டான ஸ்ரீஷ்யாசார்யஸம்பந்தம், கூராதிபபட்டார்யர்களிடங்களிலும், அபயப்ரதராஜ தத்புத்ரர்களிடங்களிலும், க்ருஷ்ணபாதலோகாசார்யரிடங்களிலும், மாதவ பத்மநாபர்களிடங்களிலும், கோலேஶதேவாதிபரிடங்களிலும், தர்ஶிக்கலாயிருக்கும்.

இப்படி தேவாதிபராலே அதிகதபரமார்த்தரான ஸ்ரீஶைலாதீஶ தேஶிகரும் 1. **"ஸ்ரீமஶலநாதமுருபக்திப்ருதம் ஸடாரௌ"** என்னும்படி ஆழ்வார் திருவடிகளிலே அதிப்ரவணராய், 2. **"ப்ரஸாதலப்தம் பரமப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே"** என்று சொல்லுகிறபடியே ஆழ்வார் திருவடிகளில் அஶேஷஶேஷ வ்ருத்தியிலும் அந்வயித்து, அவருடைய அமுதமென்மொழியான திருவாய் மொழியே தமக்கு தாரகாதிகளெல்லாமாக அநுபவித்துக்கொண்டு வாழ்ந்து போராநிற்க, அப்படி அநுபோக்தாவான அந்தத் a திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழுமணவாளமாமுனிவனென்றும், b "ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்" என்றும் பேசும்படி பெரியஜீயரும் அவர் திருவடிகளை ஆஶ்ரயித்து, 3. **"அஸ்மி-ஶ்ரயதயம் பூய: ஸ்ரீஶைலாதிஶதேஶிகம்। அஶேஷாநஶ்ருணைத்திவ்யாந் ப்ரபந்தாந் பந்தநச்சிதய:"** என்கிறபடியே திருவாய்மொழி முதலான அஶேஷ திவ்ய ப்ரபந்த தாத்பர்யத்தையும் அவருபதேஶ முகத்தாலே லபித்தருளினிறே.

பின்பு, ஸர்வலோக ப்ரசாரமுண்டாம்படியிறே இவர் ஈட்டை நடத்தி யருளிற்று. அதுக்கு மேலே இவர்க்குப் பெருமாள் அருள்பாடிட்டருளித் தம் திருவடியூன்றுவித்திறே திருவாய்மொழியினீட்டை ப்ரவர்த்திப்பித்ததும். 4. **"சரணப்ரஸமர்ப்பணத், தர்ஶயந் துர்க்ரஹாநர்த்தாந் த்ரமிடோபநிஷத்கீராம்"** என்னக் கடவதிறே. அத்தாலே முப்பத்தாருயிரப் பெருக்கரென்றுயிற்று இவர் பேர் பெற்றது. 5. **"ஆர்யாச்சரீஶைலநாதாதிகதஶடஜித்ஸக்தி பாஷ்யோ மஹிம்நா யோகீந்த்ரஸ்யாவதாரோ5யமிதி ச கதிதோ யோ ரஹஸ்யப்ரபந்தாந்। வ்யாக்யாத் வாநாத்ரியோகிப்ரவரவரதநாராயணத்யைஸ்ஸஶிஷ்யைஶ்சாதாநீத் ஸம்ப்ரதாயம் வரவரமுநிபம் நௌமி தம் துங்கபோதம்"** என்னும்படியிறே பெரியஜீயர் ப்ர பாவமிருப்பது. பின்பும், 6. **"யோ5வாப்ய ஸௌம்யவரயோகி வராச்சடாரி ஸ்ரீஸக்தி பாஷ்யமத தத்ப்ரதிதம் விதேநு:। தாந் பட்டநாதமுநிவாநமஹாத்ரியோகி வாதூலவம்ஶ்யவரதார்யகுகாந் பஜாம:॥"** என்னும்படி ஸௌம்யஜாமாத்ருமுனி வர்யர் ஸம்ப்ரதாயம் நடந்துபோரும்படி இதுவாயிற்று.

6. [தாந் பட்டநாதமுனி]யென்று இவர்களில் ப்ரதமோபாத்தரான பெரிய பட்டர்பிரான் ஜீயரும் ஸகலதிவ்யப்ரபந்த வ்யாக்யாநங்களையும் ஸ்வாசார்ய

---

a வாழிதிருநாமம் b தனியன்

முகேந லபித்து, அதுக்கு த்யோதகமாக—அத்தை ஸ்வப்ரபந்தமான அந்திமோபாயநிஷ்டையிலே a "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட மணிமாயன்" என்கிறவிடத்திலே கிடாம்பியாச்சான் - கதையையும், b "பொன்னுலகாளீரோ" என்கிற பாட்டினீட்டிலே அருளாளப்பெருமாளெம்பெருமானார் கதையையும், c "நாவகாரியம்" என்கிற பாட்டின் வ்யாக்யாநத்திலே திருக்குருகைப்பிரான்பிள்ளான், வடுகநம்பி, இவர்களருளிச்செய்த வார்த்தைகளையும், அழகியமணவாளப்பெருமாள் நாயனாரருளிச்செய்த திருப்பாவை வ்யாக்யாநத்திலே, நஞ்ஜீயர் ஸ்ரீபாதத்தை- அகன்றுபோவானெரு வைஷ்ணவன் விஷயமாகத்தஸம்பந்தமுடையராயிருப்பாரொரு ஜ்ஞாநாதிகரைக்குறித்து, ஜ்ஞாநாதிகையான அம்மையாரருளிச்செய்த வார்த்தையையும், "நம்மாழ்வாரை பகவதஸ்வதாரமாக ஆளவந்தாரருளிச்செய்துபோருவர் — என்னுமது திருவிருத்தவ்யாக்யாநத்திலே ஸுஸ்பஷ்டம்" என்றும் d "நம்புவார் பதி வைகுந்தம்" என்கிறவிடத்தில் "கூரத்தாழ்வான் திருமகனார் அவதரித்தபின்பு ஸம்ஸாரத்துக்கும் பரமபதத்துக்கும் இடைச்சுவர்தள்ளி ஒருவிபூதியாயிற்று" என்றும்— கண்ணிநுண்சிறுத்தாம்புவ்யாக்யாநத்திலே திருவழுதிவளநாடு தாஸரருளிச்செய்த வார்த்தையையும், "அவர் பாசுரங்கொண்டறுதியிடக்கடவோம்" என்று "பிள்ளைலோகாசார்யர் தாமவதாரவிஸ்ரமம்" என்னுமத்தை ஸ்வாசார்யர் ஸ்ரீவசநபூஷணவ்யாக்யாநப்ரவேஸத்திலே ப்ரதிபாதித்தபடியையும்; e "வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திகள்" என்கிறவிடத்துக்குத் திருநாராயணபுரத்திலாயி அருளிச்செய்த ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பகவர் துறைவேறிட்ட கதையையும், மற்றும் தாம்ஜதிஹ்ருதயமாக அருளிச்செய்யும் அஸ்ரோஷரஹஸ்ய வாக்யங்களையும் "அஸ்மதாசார்யோக்தம்" என்று ப்ரகாசிப்பித்தருளினரிறே.

ஏவம்விதமான அர்த்தவிஸேஷங்கள் எல்லாவற்றையும் தம் திருவடிகளை ஆஸ்ரயித்துத் திருவடிகளல்லதொரு தெய்வமறியாத மதுரகவிதாஸரண்ணன் முதலானார்க்கு ப்ரஸாதித்தருளினர்; அவரும் 1. **"பூயோவதிர்ணமிவ ஸௌம்யவரம் முநீந்த்ரம்"** என்னும்படி வரவரமுனிவர்யாபராவதாரமாய்த்தங்நாமபாஜநராய், தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான அழகியமணவாளச்சீயருக்குத் திருவாய்மொழியொழிந்த அனைத்தாழ்வார்களருளிச்செயல் மூவாயிரத்துக்கு வ்யாக்யாநமும் ஆசார்யர்கள் திவ்யஸூக்திகளான அஸ்ரோஷரஹஸ்ய வ்யாக்யாநமும் தாமே ப்ரஸாதித்தருளினர். "பெரியதிருமொழிக்கு அண்ணன் மேல்நாட்டிலே எழுந்தருளியிருக்கிற காலத்திலே அவர் ஸந்நிதியிலே அர்த்தம் அநுஸந்தித்தருளினர்" என்று அஸ்மதாசார்யோக்தம்.

---

a 4.8-2. b 6-8-1. c பெரியாழ் 4-4-1. d கண்ணி 11 e ஆசார்ய 32.

அநந்தரம். [வாநமஹாத்₃ரியோகி₃யென்று] ப்ரஸ்துதரான வானமாமலை ஜீயரும் தம்முடைய ஸ்ரீபாத₃த்தை ஆஸ்ரயித்த ராமாநுஜன்பிள்ளைக்கும், கோயில் பெரியகந்தாடையண்ணன் ஸ்ரீபாத₃த்திலாஸ்ரயித்த ஸுத்₃த₄ஸத்வமண்ணனுக்கும் ஈடுமுதலான தி₃வ்யப்ரப₃ந்த₄வ்யாக்₂யாநங்களை ப்ரஸாதி₃த்தருள, அவர்களுமப்படியே தந்தாம் ஸிஷ்யபுத்ரர்களுக்கு ப்ரவர்த்தகராம்படி ப்ரஸாதி₃க்க, அத்தாலே அத்₃யாபி நடந்துசெல்லுகிறது. இனி, a ருசிரஜாமாத்ருயோகீ₃ந்த்₃ர பாத₃ாஸ்ரய ராய், வாதூ₂லவம்ஸ்ய வரத₃ார்யரான பெரியவண்ணனும், ஆசார்ய நியமநத்தின் படியே ஆசார்யபௌத்ரரான நாயனரை அநுவர்த்தித்துத் திருவாய்மொழியினீடு ப்ரஸாதி₃த்தருளினர்.

வேத₃ாந்தாசார்யராய், பின்பு "ஸ்ரீவைஷ்ணவத₃ாஸர்" என்று பெரியஜீயராலே நிரூபகத்தையுடையரான ப்ரதிவாதி₄ ப₄யங்கரவண்ணரும், ப₄ட்டர்பிரான் ஜீயர் ஸ்ரீபாத₃த்திலவராய், "அழகியமணவாளப்பெருமாள் நாயனர்" என்று திருநாமத்தையுடையரான திருப்பதியிலழகியமணவாளச்சீயர் முதலானர்க்கு ஈட்டையும் ஸ்ரீப₄ாஷ்யத்தையும் ப்ரஸாதி₃த்தருளி, "திருவாய்மொழிநாயனர்" என்னுமதுவே நிரூபகமாம்படி ஜீயரை விஸேஷாபி₄மானம் பண்ணியருளினர். முன்பு திருவாய்மொழியினீடு ஏகமுக₂மாய், அநந்தரம் த்ரேத₃ாவாய், பெரிய ஜீயராலே ப்ராக்சதுர்த்த₄ாவாய், அநந்தரம் ஸஹஸ்ரமுக₂மாய் ப்ரவஹிக்கும்படியாயிற்று. மற்றுமுண்டான ஆசார்யர்கள் ஸம்ப்ரதா₃யங்களையும் அவ்வவ ஸம்ப்ரதா₃யஸ்த₂ருபதே₃ஸ மூலமாகக் கண்டுகொள்வது. இப்படி உபதே₃ஸமாலேயாய் துறையுண்டுவருகிற இத்தனியன்களிரண்டையும், திருவாய்மொழி முதலான தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாநாரம்ப₄ வேளையிலும் அவைசாற்றும் ஸமயத்திலும் அநுஸந்தி₄த்துக்கொண்டுபோரும்படி அருளிச்செய்தாராயிற்று.

இந்தத் தனியனில், **"நிக₂மாந்தயோகி₃ ஜக₃த₃ாசார்யௌ ஸக்ருஷ்ணத்₃வயௌ"** என்று - நஞ்ஜீயரையும், நம்பிள்ளையையும், பெரியவாச்சான்பிள்ளையையும். வடக்குத்திருவீதிப்பிள்ளையையும் எடுத்திருக்கச்செய்தேயும், இனிமேல் ப்ரத்யேகமாகவுமிவர்கள் தனியன்களை அநுஸந்தி₄க்கிறதுக்குக் கருத்து — நஞ்ஜீயர் ஒன்பதினாயிரப்படி வ்யாக்₂யாநமருளிச் செய்கையாலும், நம்பிள்ளை ஈடு முப்பத்தாறாயிரத்துக்கு ப்ரவர்த்தகராகையாலும், பெரியவாச்சான் பிள்ளை இருபத்துநாலாயிரப்படி வ்யாக்₂யாந மருளிச்செய்கையாலும், b வடக்குத்திருவீதிப்பிள்ளை இந்த நாடறியமாறன் மறைப்பொருளை நன்குரைத்ததீடுமுப்பத்தாறுயிரப்படியாகையாலும்.

---

a கோயிலண்ணன் தனியன். b உபதே₃ஸ 44.

1. /திருக்குருகைப்பிரான் பிள்ளான் தனியன்

१. द्राविडागमसारज्ञं रामानुजपदाश्रितम्।
रुचिरं (सर्वज्ञं) कुरुकेशार्यं नमामि शिरसाऽन्वहम्॥ १.

1. த்₃ராவிட₃ாக₃மஸாரஜ்ஞம் ராமாநுஜபத₃ாஶ்ரிதம்।
ருசிரம் (ஸர்வஜ்ஞம்) குருகேஶார்யம் நமாமி ஶிரஸாऽந்வஹம்॥

திருக்குருகைப்பிரான் பிள்ளானுடையதான இத்தனியனுக்கு அர்த்த₃ம்— தமிழ் வேத₃மான திருவாய்மொழியின் ஸாரார்த்த₂த்தை அறிந்தவராய், எம்பெருமானுருடைய திருவடிகளை ஆஶ்ரயித்தவராய், அழகியவரான (அல்லது எல்லாமறிந்தவரான) திருக்குருகைப்பிரான் பிள்ளானை தினந்தோறும் தலையால் வணங்குகிறேன்.

2. நஞ்சீயர் தனியன்

२. नमो वेदान्तवेद्याय जगन्मङ्गलहेतवे।
यस्य वागमृतासारपूरितं भुवनत्रयम्॥ २.

2. நமோ வேத₃ாந்தவேத்₃யாய ஜக₃ந்மங்க₃ளஹேதவே।
யஸ்ய வாக₃ம்ருதாஸாரபூரிதம் பு₄வனத்ரயம்॥ 2.

நஞ்ஜீயரதான இந்தத்தனியனுக்கர்த்த₃ம் - யாவரொருவருடைய ஒன்பதினாயிரப்படி வ்யாக்₂யாநமாகிற அம்ருதப்ரவாஹத்தினாலே லோகமெல்லாம் பரிபூர்ணமாயிற்றது, ஜக₃த்துக்கு மங்க₃ளாவஹராய்க் கொண்டிருக்கிற அந்த வேதா₃ந்தி நஞ்ஜீயரின் பொருட்டு நமஸ்காரமாகக்கடவது. (2)

3. நம்பிள்ளை தனியன்

३. वेदान्तवेद्यामृतवारिराशेर्वेदार्थसारामृतपूरमग्र्यम्।
आदाय वर्षन्तमहं प्रपद्ये कारुण्यपूर्णं कलिवैरिदासम्॥ ३.

3. வேத₃ாந்தவேத்₃யாம்ருதவாரிராஶேர் வேத₃ார்த்த₂ ஸாராம்ருதபூரமக்₃ர்யம்।
ஆத₃ாய வர்ஷந்தமஹம் ப்ரபத்₃யே காருண்யபூர்ணம் கலிவைரித₃ாஸம்॥ 3.

நம்பிள்ளையதான இந்தத் தனியனுக்கர்த்த₂ம் - வேதா₃ந்தி நஞ்ஜீயராகிற அம்ருதமயமான ஸமுத்₃ரத்தில் நின்றும் வேத₃த்தினுடைய ஸாரார்த்த₂மான திருவாய்மொழியாகிற அம்ருதத்தை வாங்கிக்கொண்டு, லோகத்திலவர்களெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படியாக வர்ஷியாநிற்கிற, க்ருபாபூர்ணரான, திருக்கலிகன்றி

/ ''குருகேஶசந்த்₃ரஜலதி₄ம்'' ''குருகைப்பிராற்கன்பாம் எதிராசர்'' என்று கூட்டுத் தனியன்களில் அனுஸந்தி₄க்கப்பெற்றவரும், ஆறுயிரப்படியை எம்பெருமானுரது நியமனத்தாலே அருளியவருமான திருக்குருகைப்பிரான் பிள்ளானது தனியனும் அவஶ்யம் அனுஸந்தி₄க்கத் தக்கதாகையால், பழையபதிப்புகளில் இல்லாவிடிலும். இத்தனியன் முதலில் அச்சிடப்படுகிறது.

தாஸ்ராகிற தாஸ்யநாமத்தை யுடையரான நம்பிள்ளையை, ப்ரபத்யே - பற்று கிறேன். (3)

4. பெரியவாச்சான்பிள்ளை தனியன்

४. श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे।
यत्कटाक्षणलक्ष्याणां सुलभश्श्रीधरस्सदा॥ ४.

4. ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷணலக்ஷ்யாணாம் ஸுலபஸ்ஸ்ரீதரஸ்ஸதா॥ 4.

பெரியவாச்சான்பிள்ளையதான இந்தத் தனியனுக்கர்த்தம் - யாவரொருவருடைய கடாக்ஷத்துக்கு விஷயபூதரானவர்களுக்கு ஸ்ரீய:பதியான ஸர்வேஸ்வரன் ஸர்வகாலமும் ஸுலபனாயிருக்கிறான், யாமுநருடைய குமாரராய், க்ருஷ்ணனென்கிற திருநாமத்தையுடையரான பெரியவாச்சான்பிள்ளையின் பொருட்டு நமஸ்காரமானது ஆகக்கடவது. (4)

5. வடக்குத்திருவீதிப்பிள்ளை தனியன்

५. श्रीकृष्णपादपादाब्जे नमामि शिरसा सदा।
यत्प्रसादप्रभावेन सर्वसिद्धिरभून्मम॥ ५.

5. ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமி ஸிரஸா ஸதா।
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம॥ 5.

வடக்குத்திருவீதிப்பிள்ளையதான இந்தத் தனியனுக்கர்த்தம் - யாவரொருவருடைய ப்ரஸாதாதிஸயத்தினாலே எனக்கு ஸமஸ்த புருஷார்த்தஸித்தி உண்டாயிற்றது, அப்படிப்பட்டிருக்கிற வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளை ஸர்வகாலமும் தலையாலே ஸேவியாநிற்கிறேன். (5)

6. பிள்ளைலோகாசார்யர் தனியன்

६. लोकाचार्याय गुरवे कृष्णपादस्य सूनवे।
संसारभोगिसन्दष्टजीवजीवातवे नमः॥ ६.

6. லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே।
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:॥ 6.

பிள்ளைலோகாசார்யரதான இந்தத் தனியனுக்கர்த்தம் - ஸம்ஸாரமாகிற ஸர்ப்பத்தினாலே கடிக்கப்பட்டிருக்கிற சேதநரை உஜ்ஜீவிப்பிக்கிறவராய், வடக்குத் திருவீதிப்பிள்ளையுடைய குமாரரான பிள்ளை லோகாசார்யரின் பொருட்டு நமஸ்காரமானது ஆகக்கடவது. (6)

7. (அழகிய மணவாளப்பெருமாள்) நாயனாராச்சான்பிள்ளை தனியன்

७. श्रुत्यर्थसारजनकं स्मृतिबालमित्रं पद्मोल्लसद्भगवदङ्घ्रिपुराणबन्धुम्।
ज्ञानाधिराजमभयप्रदराजपुत्रमस्मद्गुरुं परमकारुणिकं नमामि॥ ७.

7. ஸ்ருத்யர்த்த₃ஸாரஜநகம் ஸ்ம்ருதிபா₃லமித்ரம்
பத்₃மோல்லஸத்₃ப₄க₃வதங்க்₄ரி புராணப₃ந்து₄ம்।
ஜ்ஞாநாதி₄ராஜ மப₄யப்ரத₃ராஜபுத்ரம் அஸ்மத்₃கு₃ரும் பரமகாருணிகம்
நமாமி॥ 7.

நாயனாராச்சான்பிள்ளையதான இந்தத் தனியனுக்கர்த்த₃ம் - ஸ்ருதிஸ்ம்ருதீதிஹாஸங்களுக்கு ஸாரார்த்த₃ப்ரதிபாத₃காராய், ஸ்ம்ருதிக்கு பா₃லமித்ரராய், விகஸத் பத்₃மஸத்₃ருஶ ப₄க₃வச்சரணங்களுக்குப் புராதந ப₃ந்து₄வாய், ஜ்ஞாநஸாம்ராஜ்ய ஸம்ருத்₃த₄ராய், பெரியவாச்சான்பிள்ளை குமாரராய், பரமகாருணிகராய், அஸ்மத்₃கு₃ருவுமான நாயனாராச்சான்பிள்ளையை ஸேவிக்கிறேன். (7)

8. அழகியமணவாளப்பெருமாள் நாயனார் தனியன்

८. द्राविडाम्नायहृदयं गुरुपर्वक्रमागतम्।
रम्यजामातृदेवेन दर्शितं कृष्णसूनुना॥ ८.

8. த்₃ராவிடா₃ம்நாயஹ்ருத₃யம் கு₃ருபர்வக்ரமாக₃தம்।
ரம்யஜாமாத்ருதே₃வேந த₃ர்ஶிதம் க்ருஷ்ணஸூநுநா॥ 8.

பிள்ளைலோகாசார்யர் திருத்தம்பியாரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாருடைய இந்தத் தனியனுக்கர்த்த₃ம் - வடக்குத்திருவீதிப்பிள்ளை குமாரரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாரான ஆசார்யபரம்பராப்ராப்தமான ஆசார்ய ஹ்ருத₃யமானது ஸாக்ஷாத்கரிப்பிக்கப்பட்டது. (8)

9. (வாதிகேஸரி) அழகியமணவாளச்சீயர் தனியன்

९. सुन्दरजामातृमुनेः प्रपद्ये चरणाम्बुजम्।
संसारार्णवसम्मग्नजन्तुसन्तारपोतकम्॥ ९.

9. ஸுந்த₃ரஜாமாத்ருமுநேः ப்ரபத்₃யே சரணம்பு₃ஜம்।
ஸம்ஸாரார்ணவஸம்மக்₃நஜந்துஸந்தாரபோதகம்॥ 9.

வாதி₃கேஸரி அழகியமணவாளச்சீயரதான இந்தத் தனியனுக்கர்த்த₃ம்- ஸம்ஸாரமாகிற ஸமுத்₃ரத்திலே அழுந்தாநிற்கிற சேதநரை அக்கரைப்படுத்துகிற ஓடமாய்க்கொண்டிருக்கிற, வாதி₃கேஸரி அழகியமணவாளச்சீயருடைய திருவடிகளைப்பற்றுகிறேன். (9)

" பிள்ளைலோகாசார்யர், நாயனராச்சான்பிள்ளை, அழகியமணவாளப் பெருமாள் நாயனர், வாதி,கேஸரி அழகியமணவாளச்சீயர், இவர்கள் நால்வரும் ஈட்டு ஸம்ப்ரத,ாயத்துக்கு ப்ரவர்த்தகராகாமலிருக்கச்செய்தேயும், பிள்ளைலோகாசார்யர் ஈட்டிலர்த்த,த்துக்கு உபயுக்தமாக * வகுளபூ,ஷணஶாஸ்த்ரஸாரமான ஶ்ரீ வசநபூ,ஷண தி,வ்யஶாஸ்த்ரத்தை அருளிச்செய்கையாலும், நாயனராச்சான் பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த இருபத்துநாலாயிரப்படி வ்யாக்,யாநத்துக்கு ப்ரவர்த்தகராகையாலும், அழகியமணவாளப்பெருமாள் நாயனர், திருவாய்மொழியினுடைய சந்தத்திரட்டான ஆசார்யஹ்ருத,யமருளிச்செய்கையாலும், வாதி,கேஸரி அழகியமணவாளச்சீயர் பன்னீராயிரப்படி யுரையும், திருவிருத்தத்துக்கு ஸ்வாபதே,ஶமு மருளிச்செய்கையாலு மிவர்களுடைய தனியன்களும் அனுஸந்தி,க்கிருர்கள் நம்மாசார்யர்கள்" என்று சிரோபாஸித ஸத்,வ்ருத்,த, ஸம்ப்ரத,ாயஸ்த,ர்களருளிச்செய்வர்கள்.

10. நாலூராச்சான்பிள்ளை தனியன்

१०. नमोस्तु देवराजाय चतुर्ग्रामनिवासिने।
रामानुजार्यदासस्य सुताय गुणशालिने॥ १०.

10. நமோ5ஸ்து தே,வராஜாய சதுர்க்,ராமநிவாஸிநே।
ராமாநுஜார்யத,ாஸஸ்ய ஸு,தாய கு,ணஶாலிநே॥ 10.

நாலூராச்சான்பிள்ளையதான இந்தத் தனியனுக்கர்த்த,ம் - " ஶ்ரீராமாநுஜ த,ாஸர்" என்கிற நாலூர்ப்பிள்ளையுடைய குமாரராய், ஶமத,மாதி, கு,ணங்களாலே விளங்காநிற்கிறவராய்க்கொண்டிருக்கிற நாலூர் தே,வராஜரென்கிற ஆச்சான்பிள்ளையின்பொருட்டு நமஸ்காரமானது ஆகக்கடவது. 10.

11. திருவாய்மொழிப்பிள்ளை தனியன்

११. नमश्श्रीशैलनाथाय कुन्तीनगरजन्मने।
प्रसादलब्धपरमप्राप्यकैङ्कर्यशालिने॥ ११.

11. நமஶ்ஶ்ரீஶைலநாத,ாய குந்தீநக,ரஜந்மநே।
ப்ரஸாத,லப்,த, பரமப்ராப்ய கைங்கர்யஶாலிநே॥ 11.

a " தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் " என்கிறபடியே:: பூ,ஸுரரான ஶ்ரீ வைஷ்ணவர்களுக்கு போ,ாக்,யமாக அவதரித்த திருவாய்மொழியிலே அவக,ாஹித்து, அதில் ஶப்,த,ரஸம், அர்த்த,ரஸம், ப,ாவரஸம், இவற்றையநுப,வித்து ததே,கநிஷ்ட,ராய், தத்,வ்யதிரிக்த ஶாஸ்த்ரங்களை த்ருணவத் ப்ரதிபத்தி பண்ணியிருக்கையாலே திருவாய்மொழியோட்டை ஸம்ப,ந்த,த்தையே தமக்கு நிரூபகமாகவுடைய திருவாய்மொழிப்பிள்ளையதான இந்தத்தனிய

a 9-4-9.

னுக்கர்த்தரும் - ஆழ்வார், மலையாளத்திலே அறுபது ஸம்வத்ஸரம் நம்பெருமாள் முதலான ஸ்வாமிகளோடே சேரத் துலுக்கவலசையாக எழுந்தருளியிருந்து, துலுக்கன் முடிந்துபோனவாறே திருநகரியைநோக்கி மீண்டெழுந்தருளுகிறவர், "திருக்கணும்பி" என்கிற க்ராமத்திலே எழுந்தருளினவாறே, திருநகரியூரின்ன விடமென்றும், கோயிலின்னவிடமென்றுந் தெரியாதபடி காடாய்ப்போனபடியைக் கேட்டருளி, "நமக்கும் நம்மடியார்க்கும் படைவீடும் திருவிருப்பும் சமைத்துத் தருவது" என்று பிள்ளைக்குத் திருமுக மனுப்பியருள, பிள்ளையும், சிஷ்யர்களும் தாமுமாக எழுந்தருளி, காடுவெட்டி நாடாக்கி, ஊரிலே குடியேற்றி, ஆழ்வாரையும் ஊரிலெழுந்தருளப்பண்ணி ஸகலவித கைங்கர்யங்களும் பண்ணுகையிலேலே மிகவும் விளங்காநிற்பாராய், குந்தீநகரத்திலே திருவவதரித்தருளினவராய், "திருமலையாழ்வார்" என்கிற திருநாமத்தையுடையவருமான திருவாய்மொழிப்பிள்ளையின் பொருட்டு நமஸ்காரமானது ஆகக் கடவது. 11.

12. மணவாளமாமுனிகள் தனியன்

१२. श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादिगुणार्णवम्।
यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरं मुनिम्॥ १२.

12. ஶ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்॥ 12.

a "வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழுமணவாளமாமுனிவன்" என்று பேசும்படி பெரிய ஜீயரும் 1. **"அஸ்மத்குரவே ஸ யஸ்மை ஶ்ரீஶைலாதீபகாய நமோ வேதாந்திகம்। அஸ்மை ஶ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்॥ அஸ்மாந்நம்ருணீகுருதே தீவ்யாந் ப்ரபந்தாந் பந்தாநச்சிதத:॥"** என்கிறபடியே - திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை ஆஶ்ரயித்து, திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தாத்பர்யத்தையும் அவருபதேஶமுகத்தாலே லபித்தருளி, "தாமதிகரித்த அர்த்தத்தை எல்லாருங் கேட்டு உஜ்ஜீவிக்கும்படியாக நடத்தவேணும்" என்று உத்யோகித்துக்கொண்டிருக்கிற இவரை, நம்பெருமாள் அர்ச்சகமுகேந அழைத்தருளி, "திருவாய்மொழியின் அர்த்தத்தை நாமும் நம்மடியாருங் கேட்டு வாழும்படி பெரியதிருமண்டபத்திலே தொடங்கி நடத்தும்" என்று தம்திருவடிகளை ஊன்றுவித்து அருள்பாடிட்டு நியமித்தருள. இவருமப்படியே நடத்துகிறவளவிலே பெரியபெருமாளும், ஈடுதொடங்கினவன்றும் சாற்றுகிறவன்றும் தாமெழுந்தருளி, - b உயர்வறவுயர்நலந்தொடங்கி, c "அவாவறச்சூழ்" என்கிற சாற்றுப்பாட்டளவாக இவருபந்யஸிக்கிற உபந்யாஸத்தைக் கேட்டருளி மிகவுமுகந்து "முப்பத்தாருயிரப்பெருக்கர்" என்று இவருக்குத் திருநாமஞ் சாத்தியருளித் தனியனுமநுஸந்தித்தெழுந்தருளினர். இப்படி பெரியபெருமாள் நிர்ஹேதுகமாகத் தம்மை விஷயீகரித்து நியமித்தருளினதுக்கு ஜீயரருளிச்செய்த திருநாமம் d "நாமார் பெரியதிருமண்டபமார் நம்பெருமாள்

a வாழிதிருநாமம். b 1-1-1. c 10-10-11. d முக்தகம்.

தாமாக நம்மைத் தனித்தழைத்து - நீ மாறன், செந்தமிழ் வேதத்தின் செழும் பொருளை நாளுமிங்கே, வந்துரையென்றேவுவதே வாய்ந்து"

இப்படி நம்பெருமாளருளிச்செய்த பெரியஜீயரதான இந்தத் தனியனுக்கு அர்த்தம்—திருவாய்மொழிப்பிள்ளையினுடைய க்ருபைக்கு விஷயபூதராய், ஜ்ஞான பக்தி வைராக்ய மஹாதிகாரியாய், ஸ்ரீபாஷ்யகாரர் விஷயத்தில் ப்ராவண்யத்தை யுடையராய்க்கொண்டிருக்கிற கோயில் அழகியமணவாளச்சீயரை ஸேவிக்கிறேனென்றபடி. (12)

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

—※—

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

திருவாய்மொழித் தனியன்கள்

1. நாதமுனிகளருளிச்செய்தது

१. भक्तामृतं विश्वजनानुमोदनं सर्वार्थदं श्रीशठकोपवाङ्मयम्।
सहस्रशाखोपनिषत्समागमं नमाम्यहं द्राविडवेदसागरम्॥ १.

1. பக்தாம்ருதம் விஸ்வஜநாநுமோதநம் ஸர்வார்த்ததம் ஸ்ரீஷடகோபவாங்மயம்।
ஸஹஸ்ரஸாகோபநிஷத்ஸமாகமம் நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்॥ (1)

பரமகாருணிகரான பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த திருவாய்மொழித் தனியன் வ்யாக்யானம்

(பக்தாம்ருதம்) a "பத்தராகக்கூடும்," b "தொண்டர்க்கமுது" என்றபடி. (விஸ்வஜநாநுமோதநம்) c "பார்பரவின்கவி" d "அடியார்க்கின்பமாரி" என்கிறத்தைச் சொன்னபடி.. (ஸர்வார்த்ததம்) e "எல்லாப்பொருளும் விரித்தாகின" என்னும்படி ஸகலார்த்தப்ரதமாயிருக்கை. f மிக்கவிறைநிலை தொடங்கி, g "மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினை" என்கிறபடியே, அறிய வேண்டுமர்த்தமெல்லாவற்றையும் அறிவிப்பிக்குமென்றபடி. (ஸ்ரீஷடகோபவாங்மயம்) h "குருகூர்ச் சடகோபன் சொல்" என்றபடி. (ஸஹஸ்ரஸாகோபநிஷத்ஸமாகமம்) ஸஹஸ்ரஸாகை-ஸாமவேதமாய், தத்ஸாரம்-சாந்தோக்யோபநிஷத்தாய், அதின் ஸாரம் - உத்கீதமென்றதாய், அத்தையாயிற்று இப்படிப் பாடியருளிற்றென்றபடி. i வேதவரும்பொருள் நூல்களை d வண்டமிழ் நூலாக்கினபடி. j எய்தற்கரிய மறைகளை ஆயிரமின்றமிழாற் செய்தற் குலகில் வரும் சடகோப

a 8-6-11. b 9-4-9. c 7-9-4. d 4-5-10. e 4-5-5. f தனியன். g கண்ணி 9. h 1-1-11. i 9-8-8. j இரா 18.

னிறே. (நமாம்யஹம் த்ராவிடவேத ஸாகரம்) a அளவியன்ற வந்தாதியாயிரத்தை b பத்தர் பரவும்படி சொல்லிற்று.

கடலையும் சடகோபன் சொல்லையும் ஸமாநமாகச் சொல்லுகிறது. (பக்தாம்ருதம்) c "விண்ணவரமுதுண" என்னும்படி. d விண்ணின்மீதமரர்கட்காய தேவ போக்யமான அம்ருதத்தையுடைத்தாயிருக்கும் அது; இது e "பாலோடமுதன்ன வாயிரம்" என்னும்படி f அவனித்தேவரான பூஸுரர்க்கு போக்யமான அம்ருதமாய், g ஆராவமுதத்தையுடைத்தாயிருக்கும். (விஶ்வஜநாநுமோதநம்) ஸர்வஜநாபிமதப்ரதமாகையாலும், தர்ஶநீயமாகையாலும், ஸமுத்ரம் ஸர்வஜநஸந்தோஷவேஷத்தையுடைத்தாயிருக்கும்; இதுவும் h "முதல்பத்தர்வானவரென்னம்மான் பார்பரவ என்னும்படி ஸேஶ்வரவிபூதி போக்ய"மாயிருக்கும். (ஸ்ரீமடகோபவாங்மயம்) அதில் அம்பஸ்ஸு அகஸ்த்ய வாங்மயமாயிருக்கும்; இதில் சந்தஸ்ஸு மடகோபவாங்மயமாயிருக்கும்; திருவாய்மொழியிறே. (ஸஹஸ்ரஶாகோபநிஷத் ஸமாகமம்) அது ஸர்வஶாகாஸாரமான சந்தஸாமஶாகாஸமாகமத்தை ஸமீபத்திலே யுடைத்தாயிருக்கும்; இது, ஸர்வவேதஶாகாஸாரமான உபநிஷத்தினுடைய திரட்சியாயிருக்கும். (நமாம்யஹம் த்ராவிடவேத ஸாகரம்) அந்த ஸாகரம் 1. "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா" என்னும்படி அரண்யனுக்கு 'ரண்ய மாயிருக்கும்; i வண்டமிழ் நூல்களான இது, சடகோபன் பாட்டென்றவாறே காடடையக் கையெடுக்கும்படியாயிருக்கும்; "நமாம்யஹம்" என்று - நாடெல்லாம் அநுஸந்திக்கக்கடவர்களிறே 2. "வந்தே ராமாயணர்ணவம்" என்னுமாபோலே.

2. "ஶ்லோக ஜால ஜலாகீர்ணம் ஸர்க்கமகல்லோல ஸங்குலம்। காண்டக்ராஹ மஹாமீநம் வந்தே ராமாயணர்ணவம்॥" அங்கு "சதுர்விம்ஶத்ஸஹஸ்ரம்". இங்கு j சீர்த்தொடையாயிரம் k தீர்த்தங்களாயிருக்கும். அங்கு ஐந்நூறு ஸர்க்கம்; இங்கு l "பத்துநூறு" என்னும்படியாயிருக்கும். அங்கு ஷட்காண்டமாயிருக்கும்; இங்கு ஷட்பதார்த்த ப்ரதிபாதகமாய், பத்துப்பத்தாயிருக்கும். அது ராமாயணர்ணவம், இது த்ராவிடவேதஸாகரம். அது ரகுவம்ஶ சரிதமாயிருக்கும்; இது m "முகில் வண்ணனடி மேற்சொன்ன சொன்மாலையாயிரம்" என்னலாயிருக்கும். அது

3. "வால்மீகிர் பகவாந் ருஷி:" என்னும்படியான வால்மீகிப்ரோக்தம்; இது n குரு கூர்ச்சடகோபன் சொல்லாயிருக்கும். அது *மஹாபாதக நாஶநமாயிருக்கும். இதுவும் o அருவினை நீறுசெய்யுமதாயிருக்கும். அது 4. "ஸம்ஸாரம் ஸ விஹாய கச்சதி புமாந் விஷ்ணோ: பதம் ஶாஶ்வதம்" என்று பலமாயிருக்கும். இதுவும் p "வானின் மீதேற்றியருள்செய்து முடிக்கும் பிறவிமாமாயக்கூத்தினையே" என்று q திருவடியே யடைவிக்கும். 1.

---

a 1-4-11. b 1-5-11. c. பெரிய 6-1-2. d பெரியாழ்திரு 3-4-10. e 8-6-11. f 8-4-10. g 2-5-5. h ஆசார்யஹ்ருதய 187. i 4-5-10. j 1-2-11. k 7-10-11. l 6-7-11. m 7-2-11. n 9-6-11. o 3-5-11. p 8-4-11. q 4-9-11.

2. (திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்) "ஆழ்வார் திருவடிகளை— அவர் ஸம்பந்தமுடைய நாட்டோடும் ஊரோடும் ஆற்றோடும் வாசியற எல்லாவற்றையும் சேர்த்து, ப்ரஸந்நமான மநஸ்ஸே! அநுஸந்திப்போரு" என்கிறது. a வைகுந்தச்செல்வனுர் சேவடியோபாதி b வைகுந்த வாணரும் c இறந்தால் தங்குமூரான d கண்ணன் விண்ணூரும் e அமுதவிரசையாறும் உத்தேச்யமாமாபோலே, இங்கும் இவை உத்தேச்யமாகிறபடி.

2. சுருக்கமுரை

2. திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும் மருவினிய வண்பொருநலென்றும் அருமறைகளந்தாதி செய்தானடியிணையே யெப்பொழுதும் சிந்தியாய் நெஞ்சே தெளிந்து. 2.

(திருவழுதி நாடென்றும்) இத்யாதியாலே - ஆழ்வார் திருவடிகளைச் சிந்திக்கும்படி சொல்லுகிறது; f "கவளயானைக் கொம்பொசித்த கண்ணனென்றும்" என்று தொடங்கி, f "பார்த்தன் பள்ளிபாடுவாள்" என்னுமாப்போலே. (திருவழுதி நாடென்றும்) g "வாய்ந்த வழுதி வளநாடன்" என்று நிரூபகமாகவிறே அதுதானிருப்பது. அவர் ஸம்பந்தத்தால் அவரோபாதி அதுவும் அநுஸந்தேயமாயிருக்குமாகையால், திருவடிகள் நாட்டோடே நடக்கிறது. (தென்குருகூரென்றும்) h "குருகூர்நகரான்" என்று - அவரிருக்குமூராகையாலே அதுவுமப்படியேயாயிருக்கை. (மருவினிய வண்பொருநலென்றும்) மருவ இனிதான வண்பொருநலென்றபடி. i பொருநல் சுங்கணிதுறைவனிறே. இதுவுமிவர் இறங்கும் துறை; அவர் திருவடிகளும் இறங்குந்துறை. j நன் ஞானத்துறையிறே. k வண்சடகோபனைப்போலே இதுவும் வண்மையுடைத்தாயிருக்கை. 1. "ஸவித்ரீ முக்தாநாம்". இப்படி விலக்ஷணமான நாடும் நகரும் துறையுமென்றநுஸந்தித்து. (அருமறைகளந்தாதி செய்தானடியிணையே யெப்பொழுதும் சிந்தியாய் நெஞ்சே தெளிந்து) அதாவது-l எய்தற்கரிய மறைகள் ஆயிரமின்றமிழாற்செய்தற்குலகில் வரும் சடகோபனைச் சிந்தையுள்ளே சிந்தித்துப் போருவென்கை. 2. "குருபாதாம்புஜம் த்யாயேத்" என்கிறபடியே திருவடிகளையே சிந்தித்துப்போரு; மற்றொன்றிலே மருளாதே தெளிந்து அவ்வடியையே அநுஸந்திக்கப்பார்.

அன்றிக்கே, வேதத்திலே 3. "வைகுண்ட புவநலோகம்" என்று நாட்டையும், 4. "யோவைதாம் ப்ரஹ்மணே வேத அம்ருதேநாவ்ருதாம் புரீம்" என்று அம்ருதவாஹிநியான விரஜையாற்றாலே ஆவ்ருதமான வைகுண்டநகரத்தையும், 5. "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்றும், 6. "தத்விஷ்ணோ: பரமம் பதம்"

---

a நான்திருவ 75. b பெரியதிருவ 68. c பெரியதிரு 10-2-10. d திருவிரு 47 e ஆர்த்தி 20. f பெரிய 4-8-1. g 5-6-11. h திருவிரு 100 i 10-3-11. j திருவிரு 93. k 2-4-11. l இரா 18.

என்றும் - அவன் திருவடிகளையும் உபநிஷத்து ஓதினைப்போலே, அந்த அருமறையின் தாத்பர்யமான அர்ச்சாவதாரமான ஆதிப்பிரானதான திருவழுதித்திருநாட்டையும், a "திருக்குருகூரதனுள் நின்றவாதிப்பிரான்" என்னும்படி அவன் வர்த்திக்கிற ஊரையும், ஊருக்கு வடக்கான வண்பொருநலாற்றையும், அங்கே a நின்றவாதிப்பிரானுடைய b நீள்கழலையுமிறே திருவாய்மொழியிற் சொல்லிற்று; இது-மற்றை உகந்தருளின நிலங்களிலாற்றுத்துறைக்கும், ஊருக்கும் நாட்டுக்கும் உபலக்ஷணம். c "குட்டநாடு" என்றிறே நாட்டையும் அருளிச்செய்துபோருவது; d "தேறுநீர்ப்பம்பை வடபாலைத் திருவண்வண்டூர்" என்றும், e "தண்புனல் சூழ் திருவரங்கத்துள்ளாய்" என்றும் - ஊரையும் ஆற்றையும் அருளிச்செய்தது. இப்படியாயிற்று திவ்யதேஶ திவ்யாகர திவ்யாதிகளின் வைபவத்தையும் திருவாய்மொழிமுகேந தர்ஶிப்பித்தது. f ஆக மூர்த்தியில் பண்ணியதமிழானபடி. திருநாமப் பாட்டுக்கள்தோறும் - தமக்கு நிரூபகமாகவும் ஊரையும் நாட்டையும் ஆற்றையும் பாடுகையாலே - அதுதான் g மிக்கவேதியர் வேதத்தினுட்பொருளாக அருளிச்செய்கையாலே, அத்தைப்பற்ற "திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும் மருவினிய வண்பொருநலென்றும் அருமறைகளந்தாதி செய்தான்" என்றிங்ஙனே சொல்லுகிறதாகவுமாம். திருவழுதிநாடென்றும் - சிந்தியாயென்னுதல்; திருவழுதிநாடென்றும் - அருமறைகளந்தாதி செய்தானென்னுதல்; ததீயவைபவமிறே வேததாத்பர்யமாயறுவது. இப்படி வேதத்தை த்ராவிடமாகச் செய்த த்ரவிடோபநிஷதாசார்யருடைய h அங்க்ரியுகளங்களை i "தெளிவுற்ற சிந்தையர்" j "தெளிந்தவென் சிந்தை" என்னுமாபோலே, "உபாயோபேயம்" என்று தெளிந்து மநஸ்ஸே ஸந்ததம் ஸ்மரித்துப்போரு" என்று ஆழ்வார் திருவடிகளே அநுஸந்தேயமாகச் சொல்லிற்று. 2.

3. (மனத்தாலும் வாயாலும்) இதில்-ஆழ்வார் திருவடிகளே ப்ராபகமும் ப்ராப்யமுமாகிறபடியை அன்வய வ்யதிரேகங்களிரண்டாலும் தர்ஶிப்பிக்கிறது.

3. சோட்டைநம்பிகளருளிச்செய்தது

3. மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணு மினத்தாரை யல்லாதிறைஞ்சேன் தனத்தாலுமேதுங்குறைவிலே னெந்தைசடகோபன் பாதங்கள் யாமுடையபற்று. 3.

(மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணுமினத்தாரை யல்லாதிறைஞ்சேன்) மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணுகையாவது- k "திருக்குருகூரதனை யுளங்கொள் ஞானத்துவைம்மின்" l "திருக்குருகூரதனைப் பாடியாடிப் பரவிச்சென்மின்கள்" என்று ஆழ்வாருபதேஶங் கேட்டபடியே, மநஸ்ஸாலே நினைத்தும், வாயாலே சொல்லியும் போருகை; பேணுகை - விரும்புகை;

---

a 4-10-1. b 1-9-11. c 8-9-1. d 6-1-10. e 7-2-6. f ஆசார்யஹ்ருதயம். g கண்ணி 9.
h தனியன். i 7-5-11. j 9-2-4. k 4-10-9. l 4-10-2.

1. "யத்₃தி₄ மநஸா த்₄யாயதி தத்₃வாசா வத₃தி" என்னக்கடவதிறே. இப்படி ஆழ்வார் ஸம்ப₃ந்த₄முடைய தே₃ஶத்திலே விருப்பமுடையவர்களையடைய ப₄ஜித்தேன். ஆழ்வார் ஸம்ப₃ந்தி₄, ஸம்ப₃ந்தி₄களை யொழிய அந்யரை ஆத₃ரித்து ப₄ஜியேன். (வண்குருகூர் பேணுமினத்தார்) a நல்லார் நவில் குருகூரிறே. (இனத்தார்) ஸமூஹமாயுள்ளவர்கள். அன்றிக்கே, ஸஜாதீயரென்றுகவுமாம். இத்தால் - b குருகூர்ச்சடகோபன் பாட்டான திருவாய்மொழியிலே அந்வயமுடைய ஶ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தை என்றபடி; c குழாங்கொள் தென்குருகூரிறே. இத்தால் திருவாய்மொழியிலே அதி ப்ரவணரானவர்களை யொழிய அந்யரை ஆத₃ரியேனென்றதாயிற்று. இப்படி அந்யரை அநாத₃ரிக்கைக்கு அடியுடைமை சொல்லுகிறது, -(தனத்தாலுமேதுங்குறைவிலேன்) என்று. 2. "த₃நம் மதீ₃யம் தவ பாத₃பங்கஜம்" என்கிறபடியே ஆழ்வார் திருவடிகளைப் பற்றின நமக்கு d "விபூ₄திஸ் ஸர்வம்" என்னும்படி, தனத்தாலும் ஏதுங்குறைவிலேன் - ஒன்றுங் குறையுடையே னல்லேன். (எந்தை சடகோபன்) e "அன்னையாயத்தனாய்" d "மாதா பிதா" என்னும்படி எனக்கு ஜநகரான ஆழ்வார். (பாதங்கள்) ப்ராப்தஶேஷியானவர் திருவடிகள்; (யாமுடையபற்று) தச்சே₂ஷபூ₄தரான நம்முடைய பற்று; f "தகை யான் சரணம் தமர்கட்கோர் பற்று" யாமுடைய பற்று இதுவாயிற்று. 3.

4. இனி, "சடகோபன் பாதங்கள்" என்றத்தை விவரியாநின்றுகொண்டு, திருவாய்மொழி ஹ்ருத்₃க₃தமாம்படி, ஆழ்வார்க்குப் பரதந்த்ரரான உடையவர் திருவடி களைத் தொழாநின்றேன் என்கிறது,—(ஏய்ந்த பெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்) என்று.

4. அநந்தாழ்வானருளிச்செய்தது

4. ஏய்ந்த பெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன் வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன் ஆய்ந்தபெருஞ் சீரார் சடகோபன் செந்தமிழ்வேதந்தரிக்கும் பேராதவுள்ளம்பெற. 4.

(ஏய்ந்த பெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன்) g "ஏற்கும் பெரும்புகழ் வான வரீசன்" என்னுமாபோலே அங்குத்தைக்கு அநுரூபமாய்ப் பொருந்தி யிருக்கிற பெரிய புகழையுடைய எம்பெருமானர்தம்முடைய. (வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்) ஒன்றுக்கொன்று பொருந்தி யிருப்பதாய் மலர்போன்ற திருவடிகளை ப்ரணதிபண்ணுகின்றேன். h "ராமா நுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்₃யே" என்கிறபடியே, ப்ராப்யபூ₄தத்₃யா - வர்த்த மாநமாய்ச் செல்லுகிறது. இப்படி வணங்குகிறது எதுக்காகவென்னில்,— (ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற) (ஆய்ந்தபெருஞ்சீரார் சடகோபன்) i "ஆய்கொண்டசீர்" என்றும், j "ஆய பெரும்புகழ்" என்றும், சொல்லுகிறபடியே, ஆயப்படும்—விலக்ஷணமாய், நிரவதி₄க

---

a திருவிரு 100. b 10-6-11. c 2-3-11. d தனியன். e கண்ணி 4. f 10-4-10. g 3-9-11. h தனியன். i 3-9-9. j 3-9-8.

மான கல்யாணகு3ணங்களால் பூர்ணரான ஆழ்வாருடையதாய் அதிஸுலப4மான த்3ராவிட3வேத3த்தை த4ரிக்கும்படி நிஶ்சலமான மநஸ்ஸைப்பெற.

அன்றிக்கே, ஆய்ந்தபெருஞ்சீராரென்று - * செந்தமிழ் வேதத்துக்கு விஶேஷணமாகவுமாம். a சீர்த்தொடையாயிரமிறே. இந்த ப்ரப3ந்த4த4ாரணார்த்த2மாக வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன். b தீமனங்கெடுத்து c மருவித் தொழும் மனத்தை ஆசார்யன் தரவேணுமிறே. ஆகையால் d "தங்குமனம் நீயெனக்குத்தா" என்னும்படி, பேராதவுள்ளம்பெறவென்று - எம்பெருமானரை ப்ரார்த்தி2க்கிறது. அதாவது - இவர்தான், e மாறனடி பணிந்துய்ந்தவராய். f "மாறன்பணித்த மறையுணர்ந்தோனே" என்றும், g "தென்குருகைப்பிரான் பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னேத் தன்பத்தியென்னும் வீட்டின்கண்வைத்த இராமாநுசன்" என்றும், h பண்டரு மாறன் பசுந்தமிழானந்தம் பாய் மதமாகவுடையராய், i திருவாய்மொழியின்மணந்தருமின்னிசை மன்னுமிடந்தொறுமிருக்குமவராய். j உறுபெருஞ்செல்வமும் மாறன் விளங்கியசீர் நெறிதரும் செந்தமிழென்றறிதரநிற்குமவராகையாலும், அவர் திருவடிகள் ராமாநுசனுகையாலும் இவரை அர்த்தி2க்கிறது; "மற்றையாழ்வார்கள் தி3வ்யப்ரப3ந்த4ங்களை அங்கே3 ராபாங்க3மாகவுடைய இவருடைய த்3ராவிட3வேத3மான தி3வ்யப்ரப3ந்த4மொழிய ததி3தரக்3ரந்த2ங்களில் சபலமான மநஸ்ஸு சலியாமல் இதொன்றிலுமேயுற்று நிலைநிற்கவேணும்" என்று அவரை அர்த்தி2க்கிறதென்கை. (4)

5. இனி, இதில் - திருவாய்மொழியினுடைய உத்பாத3கரையும் வர்த்தகரையுஞ்சொல்லுகிறது — (வான்றிகழுஞ்சோலை) என்று.

5. பட்டருளிச்செய்தது

5. வான்றிகழுஞ்சோலை மதிளரங்கர்வண்புகழ்மேல், ஆன்றதமிழ்மறைகளாயிரமும்— ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த, இதத்தாயிராமாநுசன். 5.

(வான்றிகழுஞ்சோலை)யாவது—வானிலே - ஆகாஶத்திலே. திகழுகிற-ப்ரகாஶிக்கிற சோலையென்றபடி. 1. "வ்ருக்ஷஷண்ட3மிதோ பா4தி" k "வானேந்து சோலை" l சோலையணிதிருவரங்கமிறே. (மதிளரங்கர்) m "திட்கொடி மதிள்சூழ்" n "மதிள் திருவரங்கம்". அதுவும் o வானையுந்துமதிளாயிருக்கை. (வான்றிகழுஞ்சோலை) உயர்ந்த சோலையையும், மதிளையுமுடைய கோயிலே நிருபகமான பெரியபெருமாளுடைய ஶ்லாக்4யமான கல்யாணகு3ணவிஷயமாய் விஸ்தருதமாயிற்று ஆயிரம் திருவாய்மொழியும். p "முகில்வண்ணனடிமேற் சொன்ன சொன்மாலையாயிரம்"

---

a 1-2-11 b 2-7-8 c 2-7-7 d பெரியதிருமொழித்தனியன் e இரா-1 f இரா-46 g இரா-23
h இரா-64 i இரா-60 j இரா-19 k l திருமாலை 14 m 7-2-3 n திருமாலை 42
o 9-10-4 p 7-2-11.

என்னக்கடவதிறே. அதுதான் a சீர்த்தொடையாயிரமென்று - சீர்கலந்தசொல்லாயிறே இருப்பது. b "நலமுடையவன்" c "ஈறில வண்புகழ் நாரணன்" என்று உபக்ரமித்து, d "வாழ்புகழ் நாரணன்" என்றிறே தலைகட்டியருளினார். பெரியபெருமாள்தான் - e நலந்திகழ் நாரணனிறே; 1. "நாராயண பரம் ப்ரஹ்ம" 2. "நாராயணபரா வேதா:" என்னக்கடவதிறே; அத்தாலே (மதிளரங்கர் வண்புகழ் மேலான்ற தமிழ் மறைகளாயிரமும்) என்கிறது.

இனித்தான் திருவாய்மொழி பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிக்கிற—f "பரபரன்" என்கிற பரத்வமும், g "சோராதவெப்பொருட்குமாதி" என்கிற - காரணத்வமும், h "முழுதுமாய் முழுதியன்ருய்" என்கிற-வ்யாபகத்வமும், i "மறுகலிலீசன்" என்கிற நியந்த்ருத்வமும், j "ஆவாவென்றருள்செய்து" என்கிற - காருணிகத்வமும், k "ஏறு சேவகனுர்க்கென்னையுமுளள்" l "வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன்சரண்" என்கிற ரக்ஷண்யத்வமும், m "எண்ணிலாப் பெருமாயனே" - என்கிற ஸக்திமத்த்வமும், n "தேவிமாராவார் திருமகள் பூமியேவ மற்றமரராட்செய்வார்" என்கிற ஸத்யகாமத்வமும், o "எண்டிசையும் கீழும் மேலும் முற்றவுமுண்டபிரான்" என்கிற-ஆபத்ஸகத்வமும், p "சுரிகுழற்கமலக்கட்கனிவாய்க் காளமேகம்" என்ற ஆர்த்தி ஹரத்வமுமாகிற அதில் பத்தர்த்தமும் - பெரியபெருமாளை ப்ரதிபாதிக்கிற q கங்குலும் பகலிலும் காணலாயிருக்கும். r "வடிவுடைவானேர் தலைவனே" என்று-பரத்வமும், s "முன்செய்திவ்வுலகம்" t "விண்ணேர் முதல்" என்று காரணத்வமும், u "கட்கிலீ" v "என்னுடையாவி" என்று-வ்யாபகத்வமும், w "பாலதுன்பங்கனின்பங்கள் படைத்தாய்" w "காலசக்கரத்தாய்" r "மூவுலகாளி" என்கையாலே-நியந்த்ருத்வமும், t "இவள் திறத்தருளாய்" என்று காருணிகத்வமும், w "பற்றிலார் பற்றநின்ருனே" என்று - ரக்ஷண்யத்வமும், x "அலைகடல் கடைந்த வாரமுதே" என்று-ஸக்திமத்த்வமும். v "என் திருமகள் சேர்மார்பனே" v "நிலமகள்கேள்வனே" v "ஆய்மகளன்பனே" என்று-ஸக்தியாலே நித்யமாகக் கற்பித்த பத்நீபரிஜநாதிகளை யுடைய ஸத்யகாமத்வமும், s "இவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்" என்று - ஆபத்ஸகத்வமும், y "முகில்வண்ணனடியையடைந்தருள் சூடியுய்ந்தவன்" என்று - ஆர்த்திஹரத்வமும் அருளிச்செய்தாரிறே; ஆக, எல்லாவற்ருலும் "மதிளரங்கர் வண்புகழ் மேலான்ற தமிழ் மறைகளாயிரம்" என்னத்தட்டில்லையிறே. ஆழ்வார்களில் நம்மாழ்வார் அதிகராணுப்போலே, எம்பெருமான்களில் நம்பெருமாள் அதிகராயிறேயிருப்பது; அத்தைப்பற்றவுஞ் சொல்லிற்று.

இப்படிப் பெரியபெருமாள் விஷயமாகவே ப்ரதிபாதித்த திருவாய்மொழியை (சன்ற முதற்ருய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்தவிதத்தாயிராமாநுசன்)

---

a 1-2-11 b 1-1-1 c 1-2-10 d 10-9-1 e பெரு 10-11 f 1-1-8 g 2-1-11 h 3-1-8
i 4-1-10 j 5-1-6 k 6-1-10 l 6-3-7 m 7-1-1 n 8-1-1 o 9-1-1 p 10-1-1 q 7-2-1
r 7-2-10 s 7-2-2 t 7-2-6 u 7-2-8 v 7-2-9 w 7-2-7 x 7-2-5 y 7-2-11.

நெடுங்காலமும் நோற்றுப்பெற்ற முந்தின மாதா ஆழ்வார்; a "வண்டமிழ் நூற்க நோற்றேன்" என்ருரிறே; வருந்திப்பெற்ற பிள்ளையை வளர்த்தெடுக்கும் மாதாவைப் போலே, திருவாய்மொழியை வளர்த்த இதத்தாய்-வார்த்தி₄ப்பித்த மாதா எம்பெரு மானரா யிற்று. b ஞானக்கலையான திருவாய்மொழிக்கு ஜந்மபூ₃மி ஆழ்வார், தத்₃ வார்த்த₃கர் எம்பெருமானர்; இப்படியாயிற்று ஜ்ஞாநஸந்தாநம் வளர்த்தியோடே நடந்து செல்லுவது. c "பெற்ருர் பெற்றெழிந்தார் பின்னும் நின்றடியேனுக்குற்ருயுய் வளர்த்து" என்னுமாபோலே. மொய்ம்பால் வளர்த்த இதத்தாயாவது-ஈன்றதாய் பெற்றுப்பொகட்டுப்போனுல் வளர்க்குந்தாய் தன் மிடுக்காலே காத்து நோக்குமா போலேயாயிற்று இவரும் அத்தைக் காத்து வளர்த்தபடியும். d தேவகிபெற்ற வுருவுகரியவொளிமணிவண்ணனே வளர்க்குந்தாயான யசோதை தன்மிடுக்காலே யெடுத்து, e "ஏதேனுஞ்சொல்லி யசலகத்தாரேதேனும் பேச நான் கேட்கமாட்டேன்" என்றும், f "தூசனஞ்சொல்லும் தொழுத்தைமாரும் தொண்டரும் நின்றவிடத் தினின்று" e "போதர்கண்டாய்" f "தாய்சொல்லுக்கொள்வது தன்மங்கண்டாய்" என்று குற்றஞ்சொல்லுமவர்களையும் தன்சொல்லாலே வாய்ப்புடை புடைத்துத் தன் வசமாக்கி, g "தீயபுந்திக்கஞ்சன்" என்று கருத்தைக் குலைத்து h "காப்பாருமில்லை" என்று இரந்து i "அசோதை வளர்க்கின்ற செய்த்தலை நீலநிறத்துச்சிறுப்பிள்ளை" என்னும்படி நிறம்பெற வளர்த்து ப்ரமேய ஸாரத்தை வார்த்தி₄ப்பித்தாப்போலே, ப்ரமாணஸாரத்தை வார்த்தி₄ப்பித்த ப்ரகாரமும். அதெங்ஙனேயென்னில்; இங்கும் ஆழ்வார் அவதரித்து j அவாவற்றுவீடுபெற்றெழுந்தருளினபின்பு, ப₃ாஹ்ய குத்₃ருஷ்டிகளாலே, * ப₄ாஷாகா₃நமான திருவாய்மொழி அபி₄பூ₄தமாய் வருகிற படியைக்கண்டு, ப₄ாஷ்யஸூக்திகளாலே அத்தை நிரோதி₄த்து அத்தையிதுக்குக் காவலான வேலியாகக் கற்பித்துத் திருவாய்மொழியைத் தன் கைவசமாக்கி, திருக் குருகைப்பிரான் பிள்ளானைக்கொண்டு இதினர்த்த₄த்தை வெளிபிடுவித்து வார்த்தி₄ப் பித்துக்கொண்டு போந்தாரிறே, k "மாறனடிபணிந்துய்ந்தவன்" என்னும்படியான அடியாராகையாலே. ஆண்டவனிட்ட பயிரை வார்த்தி₄ப்பிக்கவேணுமிறே அடியானுக்கு. 5.

6.(மிக்கவிறைநிலையித்யாதி₃)1. "**ஸ்ரீபதிஸ்சேதநஸ்யாஸ்ய ஹேதுத்வேந ஸமாஸ்ரித:। அநிஷ்டஹாநி மிஷ்டஸ்ய ப்ராப்திஞ்ச குருதே ஸ்வயம்॥**" என்று ஸகலவேத₃ஸங்க்₃ரஹ மான திருமந்த்ரத்தில் பத₃த்ரயத்தாலும் ப்ரதிபாதி₃க்கப்படுகிற அர்த்த₃பஞ்ச கத்தை, l "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்னும்படி ஸ்ரீய:பதியான ஸர் வேஶ்வரனுலே m மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வாரருளிச்செய்த n திருமால வன் கவியான திருவாய்மொழி ப்ரப₃ந்த₄ம ப்ரதிபாதி₃த்த ப்ரகாரத்தை இத்தனி யனிலே சொல்லித் தலைக்கட்டுகிறது—(மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர் நிலையும

a 4-5-10 b 1-9-8 c பெரியதிரு 8-9-7 d பெரியாழ் 1-3-17 e பெரியாழ் 2-9-6
f பெரியாழ் 2-9-8 g பெரியாழ் 2-2-5 h பெரியாழ் 2-8-1 i பெரியாழ் 1-3-12 j 10:10-11
k இரா-1 l 8-8-11 m 1-1-1 n திருவிரு 48.

தக்க நெறியும் தடையாகித் தொக்கியலு மூழ்வினையும் வாழ்வினையும் குருகையர் கோன் யாழினிசை வேதத்தியலோதும்) என்று.

6. இதுவும் பட்டருளிச்செய்தது

6. மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும் தக்கநெறியுந் தடையாகித்-தொக்கியலும் வூழ்வினையும் வாழ்வினையு மோதும்குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல் 6.

மிக்கவிறைநிலையாவது-q "இறைநிலை யுணர்வரிது" என்னும்படியான ஸர்வஸ்மாத் பரத்வம். 1. **"தமீஸ்வராணும் பரமம் மஹேஸ்வரம் தம் தே3வதாநாம் பரமஞ்ச தை3வதம்" 2. "நாராயண பரோஜ்யோதி:"** என்றும், 3. **"தத்வம் நாராயண: பர:"** என்றும், a "மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவாவோ" என்றும், b "தேவ தேவனே" என்றும், c "பரஞ்சோதி நீ பரமாய்" என்றும், d "மிகுஞ்சோதி" என்றும், e "முழுதுண்டபரபரன்" என்றும், f "வானேரிறை" என்றும், g "கழிபெருந்தெய்வம்" என்றும், h "பெருந்தெய்வம்" என்றும், i "பெரியவப்பனைப் பிரமனப்பனை உருத்திரனப்பனை" என்றும், j "திருவுடையடிகள்" என்றும், k 'திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடையபிரானார்" என்றும், l "திருமாமகள் கேள்வா தேவா" என்றும் சொல்லப்படுகிற ஸர்வஸ்மாத்பரனேயாயிற்று (மிக்கவிறை)என்கிறது. m "திருமங்கை நின்றருளுந்தெய்வம்" n "திருமாலேயல்லது தெய்வமென்றேத்தேன்" o "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்னக்கடவதிறே. இதுவாயிற்று பரஸ்வரூபம். இறை நிலையாவது - ஸௌலப்4யத்துக்கவ்வருகில்லாதபடி முடிந்த நிலமான ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தோடே நிற்கிற அர்ச்சாவதாரமென்கை; அத்தையாயிற்று p "எளிவரும்" இத்யாதி3யிற் சொன்னது. இதிறே ஈஸ்வர ஸ்வரூபயாதா3த்ம்யம்.

